இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 416

சனி, 7 நவம்பர், 2026 |

பக்கங்கள் 18

www.ilakku.org

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஒழிப்பும் புதிதாக உருவாகும் சட்டப் பொறிகளும்

விதுரன்

31-வது ஆண்டு யாழ்/வலிகாம இடப்பெயர்வு

அ. சுரேஷ் (மன்னார்)

அமெரிக்க இடைக்காலத் தேர்தல்கள் மாறிவரும் உலக ஒழுங்கு குறித்து நமக்கு உணர்த்துவது என்ன?

தமிழில்: ஆர்தீகன்

செம்மணிக்கு நீதிகோரி மற்றுமொரு போராட்டத்திற்கு ஏற்பாடு!



செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி முன்னெடுக்கவுள்ள போராட்ட ஒழுங்கமைப்பு தொடர்பில், நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. அதில் அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் புதிய நிர்வாகம் இன்றைய தினம் (05) தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகச் சந்திப்பில், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையை முற்றாக நிராகரிப்பதோடு, சர்வதேச நீதியை வலியுறுத்தி எதிர்வரும் 16ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழி அமைந்துள்ள பகுதிக்கு அருகாமையில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த போராட்ட முன்னெடுப்பு தொடர்பிலும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடல் ஒன்றை அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன்படி, இன்றைய தினம் (07) குறித்த கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள்,

தொடர்ச்சி: பக்கம் 16

மயிலத்தமடு – மாதவனைப் பிரச்சினையைச் சஜித் இனவாத ரீதியாகக் கையாள்வதாகக் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்ட மயிலத்தமடு, மாதவனை அத்துமீறல் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எந்தக் கருத்தும் சொல்லாமல் மௌனம் காப்பது அவருடைய உண்மை முகத்தை வெளிப்படுத்தியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அதிகூடிய வாக்குகளை அவர் பெற்றார்.

மட்டக்களப்பில் ஓர் அநியாயம் நடக்கும்போது, பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சித் தலைவராக உள்ள சஜித் பிரேமதாச இதுவரை அதைப் பற்றிக் கவனத்தில் கொள்ளாமல் இருப்பது அவருக்கு வாக்களித்த மட்டக்களப்பு மாவட்ட மக்களை அவமதிக்கும் செயற்பாடாகும்.

தொடர்ச்சி: பக்கம் 16

வடக்கு மீனவர்கள் திட்டமிட்டு வஞ்சிக்கப்படுவதாக ரவிகரன் சாடல்!

அத்துமீறி நுழையும் சட்டவிரோத இந்திய மீனவர்களாலும், உள்ளூர் சட்டவிரோதக் கடற்றொழிலாளர்களாலும் வடபகுதிக் கடற்பரப்பு முழுவதும் சட்டவிரோதிகளின் கூடாரமாக மாறிவிட்டதாகவும், நேர்மையான வழியில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுக் கடற்றொழில் மேற்கொள்ளும் மீனவர்கள் வஞ்சிக்கப்படுவதாகவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், எல்லை தாண்டி வரும் இந்திய இழுவைப் படகுகளின் வருகையை முற்றாகக் கட்டுப்படுத்த முடியாத இலங்கை கடற்படையின் செயற்பாடு மிகவும் கேவலமானது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மிகவும் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். சட்டவிரோதக் கடற்றொழில் நடவடிக்கைகளால் வடக்கு கடற்பரப்பு மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றது. சட்டவிரோத இந்திய மீனவர்கள் ஒருபுறம், இலங்கைச் சட்ட விரோதிகள் மறுபுறம் என, கடல் முழுவதும் சட்டவிரோதிகளின் கூடாரமாக மாறிவிட்டது

தொடர்ச்சி: பக்கம் 15

அமெரிக்காவில் மூன்றாவது சக்தி உருவாகக்கூடும்



அமெரிக்க இடைத்தேர்தலில் குடியரசுக் கட்சியின் தோல்வியானது, அமெரிக்காவின் இரு கட்சி ஆட்சிக்கு சவால் விடும் ஒரு "மூன்றாவது சக்திக்கு" வழிவகுக்கக்கூடும் என்று தெஹ்ரான் பல்கலைக்கழகப் பேராசிரியர் சையத் முகமது மராண்டி தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை நடந்த இடைத்தேர்தலில், காங்கிரஸின் இரு அவைகளின் கட்டுப்பாட்டையும் ஜனநாயகக் கட்சியினர் கைப்பற்றினர். ராய்ட்டர்ஸ் மற்றும் சிபிஎஸ் நியூஸ் வெளியிட்ட தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள் மீதான பரவலான அதிருப்தியையும், ஈரானுடனான அமெரிக்கப் போருக்கு எதிரான எதிர்ப்பையும் காட்டுகின்றன.

"மக்கள் போரை விரும்பவில்லை என்பதைக் காட்டுவதால், இந்த [குடியரசுக் கட்சியின் தோல்வி] ஈரானுக்கு ஒரு நல்ல செய்தி," என்று மராண்டி புதன்கிழமை(4) கூறினார். அமெரிக்கர்களின் பொருளாதார நிலை தொடர்ந்து சரிந்து வருவதால், அவர்கள் வாஷிங்டனின் கொள்கைகளால் "சலித்துப்போய்விட்டனர்" என்றும் அவர் மேலும் கூறினார்.

அமெரிக்காவின் இரு முக்கியக் கட்சிகளும், பொதுமக்களின் உணர்வுகளிலிருந்து துண்டிக்கப்பட்டு, ஏறக்குறைய ஒரே மாதிரியான கொள்கைகளைப் பின்பற்றும் ஒரு அரசியல் "ஒற்றைக் கட்சியை" உருவாக்கியுள்ளதாக மராண்டி வாதிட்டார். வாஷிங்டன் தொடர்ந்து வாக்காளர்களைப் புறக்கணித்தால், ஓரிரு ஆண்டுகளில் ஒரு "மூன்றாவது சக்தி" உருவாகக்கூடும் என்றும், அரசியல் ஸ்தாபனத்தின் கருத்துக்களிலிருந்து அடிப்படையில் மாறுபட்ட கருத்துக்களைக்

தொடர்ச்சி: பக்கம் 15

இஸ்ரேல் தேர்தல் முடிவுகள் - நெதன்யாகு பெரும்பான்மையை இழந்தார்



இஸ்ரேலின் மத்திய தேர்தல் குழு அக்டோபர் 27 அன்று நடந்த தேர்தலைச் சான்றளித்துள்ளது. இதன் விளைவாக, பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அணிக்கு 120 இடங்களில் 53 இடங்கள் கிடைத்துள்ளன. இது பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களை விட எட்டு இடங்கள் குறைவாகும்.

மேலும், 2022-ல் 64 ஆக இருந்த இந்த எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளது. முன்னாள் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைத் தலைவர் காடி ஐசென்கோட் தலைமையிலான எதிர்க்கட்சி அணி 48 இடங்களையும், அரபு தலைமையிலான கட்சிகள் சாதனை அளவாக 19 இடங்களையும் வென்றுள்ளன. எனவே, எந்த அணியாலும் தனியாக அரசாங்கத்தை அமைக்க முடியாது. மோசடி நடந்ததற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று குழு கூறியது. இது நெதன்யாகுவின் தரப்பிற்கு ஒரு பின்னடைவாகும்.

அரபு தலைமையிலான கட்சிகள் கத்தார் பணத்தைக் கொண்டு தேர்தலை "திருடி விட்டதாக" லிகுட் கட்சி எந்த ஆதாரமும் இல்லாமல் குற்றம் சாட்டியிருந்தது; ஆனால் கத்தார் இதை நிராகரித்துள்ளது. லிகுட் கட்சி இந்தச் சான்றளிப்பு நிகழ்விலிருந்து விலகியது. இட்டாமர் பென்-க்விர் கட்சி இதை எதிர்த்தது. அடுத்த அரசாங்கத்தை யார் அமைக்க வேண்டும் என்பது குறித்து ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் தற்போது பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளார். மேலும், ஐசென்கோட்டிற்கு முதல் வாய்ப்பு கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

அரபு தலைமையிலான கட்சிகளுடன் கூட்டணி அமைத்தால் அவருக்கு 67 இடங்கள் பெரும்பான்மை கிடைக்கும்; ஆனால் அவர் முன்னதாக அவர்களுடன் கூட்டணி அமைப்பதை நிராகரித்துள்ளார்.

ஹோர்முஸ் நீரிணை வழியாக இந்தியக் கப்பல்கள் செல்ல ஈரான் அனுமதி



ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்வதற்கு ஈரான் விதித்துள்ள கட்டுப்பாடுகளிலிருந்து இந்தியக் கப்பல்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடன் சேர்த்து சீனா, ஈராக் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளின் கப்பல்களுக்கும் இந்த விலக்கு வழங்கப் பட்டுள்ளதாக ஈரானிய நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விலக்குகள் ஈரானின் நலன்களைக் கருத்தில் கொண்டே வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவின் விஷயத்தில், மருந்துகளை இறக்குமதி செய்வதை எளிதாக்குவதற்காக இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக ஈரானிய நாடாளுமன்றத்தின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைக் குழுவின் துணைத் தலைவர் அமீர் ஹுயாத்-மொகத்தம், செவ்வாய்க்கிழமை அன்று ஈரானிய மாணவர் செய்தி முகமையிடம் (ISNA) தெரிவித்தார். சீனாவின் அரசியல் ஆதரவைப்

தொடர்ச்சி: பக்கம் 16

ஐரோப்பாவில் குளிரூட்டும் அமைப்புகள் மீது சைபர் தாக்குதல்



மூன்று பிரெஞ்சு இரத்த வங்கிகளில் உள்ள குளிரூட்டும் அமைப்புகளை ஹேக்கர்கள் குறிவைத்து, சேமிப்பு வெப்ப நிலையை மிக அதிக அளவிற்கு உயர்த்தி, முக்கிய இரத்தப் பொருட்களை அழிக்க முயன்றதாக அந்நாட்டின் தேசிய இரத்த சேவை புதன்கிழமை(4) தெரிவித்தது. ஐரோப்பா முழுவதும் உள்ள பல்பொருள் அங்காடிகளில் நடந்த இதேபோன்ற தொடர் சம்பவங்களைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் நடந்துள்ளது; இதனால் மில்லியன் கணக்கான யூரோக்கள் சேதம் ஏற்பட்டது.

வெளிப்புற குளிரூட்டும் வழங்குநரால் இயக்கப்படும் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புகளை இந்த இணையவழித் தாக்குதல் ஊடுருவியதாகவும், இதன் மூலம் தாக்குதல் நடத்தியவர்கள் மூன்று பிளாஸ்மா சேமிப்பு வசதிகளில் வெப்பநிலை மற்றும் பனி நீக்கும் அமைப்புகளைத் தொலைவிலிருந்து கையாள முடிந்ததாகவும் பிரெஞ்சு இரத்த நிறுவனம் (EFS) கூறியது.

இந்தச் சம்பவத்தை முதன்முதலில் வெளியிட்ட பிரெஞ்சு புலனாய்வு வார இதழான 'Le Canard Enchaine'-இன் படி, ஹேக்கர்கள் சாதாரணமான -30°C (-22°F) வெப்பநிலையை, கொதிநிலைக்கு மிகவும் மேலான 110°C (230°F) வரை உயர்த்த முயன்றதாகக் கூறப்படுகிறது.

தொடர்ச்சி: பக்கம் 15

மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டுமென சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்பு கோரிக்கை

மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதுடன், 2017ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கலப்புத் தேர்தல் முறையை நீக்கி, மாவட்ட அடிப்படையிலான விகிதாசாரப் பிரதி நிதித்துவ முறையை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.



மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளிலேயே அக்கட்சி இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

1987ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமை, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக அரசியலமைப்பு அங்கீகாரத் தைப் பெற்றதாக அதில் சுட்டிக்காட்டியுள்ளது.

மாகாணசபைகள் வெறுமனே நிர்வாக அமைப்புகள் அல்ல என்றும், அவை அரசியலமைப்பின் மூலம் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட சட்டவாக்க அமைப்புகள் என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தி, புலம்பெயர் மக்களின் முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாத் தல் ஆகியவற்றுக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண நிர்வாகங்கள் அவசியமானவை என்றும் தெரிவித்துள்ளது.

2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாணசபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இணைந்த கலப்புத் தேர்தல் முறைமையே தற்போதைய தேர்தல் முடக்கநிலைக்கு முக்கிய காரணம் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

குறித்த தேர்தல் முறைமையை நடைமுறைப்படுத்துவதற் குத் தேவையான தொகுதி எல்லை நிர்ணயப் பணிகள் முழுமை யடையாததால், மாகாணசபைத் தேர்தல்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தொகுதிவாரி தேர்தல் முறைமையால் தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் மக்களின் வாக்குப் பலம் சிதறடிக்கப்படுவதுடன், சிறுபான்மை மக்களின் அரசியல் பிரதி நிதித்துவமும் பாதிக்கப்படலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகள் உள்ளூராட்சி மன்றங்களைப் போன்றவை அல்ல என்றும், அவற்றின் சட்டவாக்க மற்றும் கொள்கை உருவாக்கப் பணிகளை முன்னெடுப்பதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்களில் நடை முறைப் படுத்தப்பட்ட 60:40 கலப்புத் தேர்தல் முறைமையினால் பல சபைகளில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற் பட்டதையும் தனது முன்மொழிவில் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, மாகாணசபைத் தேர்தல்களை விரைவாக நடத்து வதற்காக 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க திருத்தச் சட்டத்தை மீளாய்வு செய்து, அதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த மாவட்ட அடிப்படையிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோரியுள்ளது.

அத்துடன், மாகாணசபைகள் கலைக்கப்பட்டாலோ அல்லது அவற்றின் பதவிக்காலம் முடிவடைந்தாலோ, அடுத்த மூன்று மாதங்களுக்குள் தேர்தல்களை நடத்துவதற்கும் புதிய சபைகளை அமைப்பதற்கும் சட்ட ஏற்பாடுகளை உருவாக்க வேண்டும் என்றும் முன்மொழிந்துள்ளது.

பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான அரசியல் பிரதிநிதித்து வத்தை மாகாணசபைகளில் மட்டுமன்றி, பாராளு மன்றத்திலும் உறுதிப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த சட்ட ஏற்பாடுகள் அவசியம் என்றும் தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாரா ளுமன்றத் தேர்தல்களின் போது தேசிய மக்கள் சக்தி வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளுக்கு அமைவாக மாகாணசபைத் தேர்தல் களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

மேலும், தேர்தல் முறைமையில் மாற்றங்களை மேற் கொள்வதன் பெயரில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் அவற்றின் சட்டவாக்க அந்தஸ்தையும் பலவீனப்படுத்தும் எந்தவொரு முயற்சியையும் நிராகரிப்பதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 15

ஆசிரியர் தலையங்கம் | 7 நவம்பர், 2026

ஈழத்தமிழரின் Gen Z (ஜென்சி) தலைமுறையே ஈழத்தமிழர் இறைமைக்கான ஒரே பாதுகாப்பு

அமெரிக்க இடைக்காலத் தேர்தல் 2026இல் Gen Z (ஜென்சி) தலைமுறையினர் என்று சுட்டப்படும் 1997இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்து 18 வயதை அடைந்தவர்கள் உடைய தாக்கம், இவர்களில் அரைவாசிப்பேர் வாக்களிப்பதற்குப் பெயரைப் பதியாமலோ அல்லது குடிமைப் பொறுப்புக்களில் அக்கறையற்று விலகியிருந்த போதிலும் கூட, தமது பரப்புரை ரீதியான பல்வேறு செயற்பாடுகள் மூலம் ட்ரம்பின் குடியரசுக் கட்சியின் பாரிய பின்னடைவுக்குக் காரணமாயினர் என்பதனைத் தேர்தல் முடிவுகள் குறித்த ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. பொருளாதாரம், ஈரான் மேலான போர் என்பன அடுத்த காரணிகளாகவே உள்ளன.

ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சிறிலங்கா 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு மூலம் அதன் ஆயுத எதிர்ப்புத் தன்மையை ஒடுக்கிய பொழுது, துப்பாக்கிகள் மௌனிக்கப்பட, சனநாயக வழிகளில் போராட்டத்துக்குப் புதிய வடிவம் கொடுக்க வேண்டிய பொறுப்பு குறிப்பாக 2008ஆம் ஆண்டு மாவீரர் உரைப் பிரகடனத்தின் வழி புலம்பதிந்து உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களுடையதாக மாறியது. இந்நிலையில், 2009க்குப் பின்னரான 17ஆவது ஆண்டு மாவீரர் நாளுக்கான மாதம் தொடங்கிவிட்ட நிலையில், ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தினைச் சனநாயக வழிகளில் முன்னெடுக்க வேண்டியவர்களாக ஈழத்தமிழரின் ஜென்சி தலைமுறையினர் உள்ளனர் என்பதனை உலகில் ஜென்சி பரம்பரையின் வழி ஏற்படும் மாற்றங்கள் ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் எடுத்துரைக்கின்றன. ஈழத்தமிழரின் ஜென்சி தலைமுறையே ஈழத்தமிழர் இறைமைக்கான ஒரே பாதுகாப்பு என்பதனை இலக்கு இவ்விடத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

அமெரிக்காவில் மட்டுமல்ல, பிரான்ஸ், போர்த்துக்கல், இத்தாலி, யேர்மன், ஸ்பெயின், அல்பேனியா, டென்மார்க் எனப் பல ஐரோப்பிய நாடுகளிலும் கடந்த இரு வாரங்களாக நடைபெற்று வரும் ஆட்சியாளர்களுக்கு எதிராக மாணவர்கள் தெருவில் இறங்கிப் போராடும் போராட்டங்களின் முக்கிய பங்காளர்களாக மட்டுமல்ல, போராட்டத்தின் வழி ஏற்புடைய தீர்வுகளைக் கொண்டு வருவதிலும் இந்த ஜென்சி தலைமுறையினரே அதிக அளவில் இருந்திருக்கின்றனர் என்பது ஆய்வுகளால் கண்டறியப்பட்டுள்ளது. இதனை ஈழத்தமிழர்கள் மனதில் இருத்த வேண்டுமென்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது.

மாணவர்களின் கல்வி, அனைத்துலகத் தரத்திற்கு வழங்கப்படாததினால் உயர் கல்வி மற்றும் ஆய்வுகளில் மாணவர்கள் பங்கேற்பதில் பின்னடைவு மட்டுமல்லாமல், உலகமயமாக்கப்பட்ட வேலைச் சந்தையில் போட்டியிட்டு வேலை பெறவும் இயலாதவர்களாக மாணவர்கள் மாறுகின்ற பொழுது, அது சமகால அரசியல் முறைமைகள் மீதான வெறுப்பாகி, கோபமாகி, உடனடி மாற்றத்தைக் கோரி இளைய சமுதாயத்தை வீறுகொண்டெழவைத்து வருகிறது என்பதே இந்த ஜென்சி தலைமுறையினரின் சமகால அரசியல் போராட்டங்கள் குறித்த உலகப் பொதுவான அரசியல் எதார்த்தமாகவுள்ளது. இந்த உலகப் பொதுவான ஜென்சி தலைமுறையினரின் அரசியல் எதார்த்தத்தினுள் ஈழத்தமிழரின் ஜென்சி பரம்பரையினர் செல்லாதவாறு கடந்த 17 ஆண்டுகளாகச் சிறிலங்காவும், அதற்கு ஈழத்தமிழின அழிப்புக்குத் துணை செய்த உலக நாடுகளும் மிகக் கவனமான முறையில் சட்டரீதியாகவும் திட்டரீதியாகவும் தடுத்து வருகின்றனர்.

அதேவேளை, 13ஆம் நூற்றாண்டு முதல் ஈழத்தமிழர்கள் தாங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் தங்கள் வரலாற்றுத் தாயகமாக இலங்கைத் தீவின் யாழ்ப்பாண வன்னி அரசின் எல்லைகளால் வெளிப்படுத்தப்பட்ட நிலப்பரப்பை வெளிப்படுத்தி வந்த நிலையை, 22.05.1972 முதல் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மாற்றினர். 04.02.1948இல், 1833இல் தாம் யாழ்ப்பாண வன்னிய அரசின் தமிழர்களின் ஆட்சிப்பரப்புக்களையும், கண்டி கோட்டே சிங்கள அரசின் ஆட்சிநிலப்பரப்புக்களையும் ஒரு அரசாகச் செயற்கையாக இணைத்து, தங்களின் சந்தை, வரி மற்றும் இராணுவ நலன்களுக்காக உருவாக்கிய சிலோன் அரசாங்கத்துக்கு சுதந்திரம் வழங்கிய பிரித்தானியாவின் சோல்பரி அரசியலமைப்பில் ஈழத்தமிழர்களின் இறைமைக்குப் பாதுகாப்பாக இருந்த 29(2) அரசியலமைப்பு விதியைத் தன்னிச்சையாக மாற்றி, வன்முறைப்படுத்திய சிறிலங்கா சிங்கள பௌத்த குடியரசு அரசியலமைப்புப் பிரகடனத்துக்குள் ஈழத்தமிழரைப் படைபல இனங்காணக்கூடிய அச்சத்தால் அடக்கி, அவர்களை அரசற்ற தேச இனமாக்கினர்.

இதனால் கடந்த 54 ஆண்டுகளாக ஈழத்தமிழர்கள் தங்கள் வரலாற்றுத் தாயகத்தில் தங்களின் இறைமையை மீளுறுதி செய்து, தங்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மீள்உறுதி செய்தலுக்கான ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்திலேயே உயிர்களையும் வாழ்வையும் அர்ப்பணித்து ஈடுபட்டு, தங்களுக்கான de facto ஆட்சியை, நடைமுறை அரசை, 1978 முதல் 2009 வரை கட்டமைத்து, அதனை 2009இல் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் மூலம் சிறிலங்கா தேசமாகவே இனப்படுகொலைகளாலும் உட்கட்டுமானச் சிதைப்புக்களாலும் செயற்பாட்டுப் பின்னடைவுக்குக் கொண்டு வந்த நிலையில், 17.05.2009 முதல் துப்பாக்கிகள் மௌனிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து சனநாயக வழிகளில் ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையின் மீளுறுதிக்காகப் போராடி வருகின்றனர்.

இந்த வரலாற்று உண்மைகள் ஈழத்தமிழரின் ஜென்சி தலைமுறையினர் பலருக்கு அறியப்படாத ஒன்றாகச் சிறிலங்காவாலும், அதன் ஈழத்தமிழின அழிப்புகளுக்கு ஆதரவு வழங்கிய நாடுகளாலும் தொடர்ந்து மறைக்கப்பட்டு வருகிறது. இதனால் ஈழத்தமிழரின் ஜென்சி தலைமுறையினர் அவர்களின் பிரிக்கப்பட முடியாத அடிப்படை மனித உரிமையான தன்னாட்சி உரிமையின் அடிப்படையில், அவர்கள் தங்கள் இறைமையை மீளுறுதி செய்வதற்கான அரசியல் தீர்மானத்தை மேற்கொண்டு, பாதுகாப்புடன் கூடிய அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் பெறச் சட்டரீதியான உரிமையுள்ளவர்கள் என்கிற அனைத்துலகச் சட்டத்தினை அறியாதவர்களாக உள்ளனர்.

சொந்தத் தாயகத்தில் அடிமையாக்கப்பட்டுள்ள இந்த நிலையை மாற்றி, அவர்களது வரலாற்றுத் தாயகத்தில் அவர்களது வாழ்வுரிமையை நிலைநாட்டுவது பிரிவினைவாதமோ அல்லது பயங்கரவாதச் செயலோ அல்ல என்கிற மனநிலையை ஈழத்தமிழரின் ஜென்சி தலைமுறையினருக்கு உருவாக்க வேண்டிய பொறுப்பு 2008 மாவீரர் உரை மூலம் உலகெங்கும் உலக இனமாக வாழும் ஈழத்தமிழர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதை இலக்கு உலகத் தமிழினமாக உள்ள ஈழத்தமிழர்களுக்கு மீள்நினைவுபடுத்த விரும்புகிறது.

ஈழத்தமிழரின் சமகால வரலாற்றை ஈழத்தமிழரின் ஜென்சி தலைமுறையினருக்கு உள்ளது உள்ளபடி எடுத்துரைப்பது என்பது கட்சி – அமைப்பு – இயக்க அரசியலுக்கு அப்பாற்பட்ட அடிப்படைத் தேவையாக உள்ளது. இதனால் இதற்கான பலமான சிந்தனை மையம் ஒவ்வொரு துறைசார் நிபுணர்களையும் இணைத்து, இந்த முள்ளிவாய்க்கால் சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பின் பின்னரான 17ஆவது ஆண்டு மாவீரர் மாதத்திலாவது முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது இலக்கின் இவ்வாரக் கருத்தாகவுள்ளது.

ஈழத்தமிழரின் அரசியல் சித்தாந்தங்கள், பொருளாதாரச் சித்தாந்தங்கள் இரண்டும் இந்தச் சிந்தனை மையத்தின் பின்னணியில் எழுதப்பட்டு உலகமயப்படுத்தப்பட்டாலே ஈழத்தமிழர் தாயகத்தினதும் ஈழத்தமிழரினதும் இயற்கை வளங்கள், மூலவளங்கள், மனித வளங்கள் குறித்த உண்மைகள் உலகுக்குத் தெளிவாகும். இதன் வழியாகவே ஈழத்தமிழினத்தின் பலத்தை, வளத்தை உலகு தனது தேவைகளுடன் இணைக்க முயற்சிக்க வைத்தாலே, அது ஈழத்தமிழரை இன்றைய அனைத்துலக அரசியல் ஒழுங்குமுறை சிதறுண்டுள்ள நிலையில் அவர்களுக்கான உலகப் பாதுகாப்பைப் பெற உதவும் என்பதே இலக்கின் பலமான எண்ணமாகவுள்ளது.

கடந்த வாரத்தில் இனந்தெரியாதவர்களால் ஐரோப்பிய நாடுகளில் உணவுப் பாதுகாப்பு முறைகளைச் சேதமாக்கும் நோக்கில், குளிர்சாதன அறைகள், பெட்டிகள் என்பனவற்றின் வெப்பநிலையைச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதியுயர் நிலைக்குக் கொண்டு சென்று பொருட்களைப் பயன்படுத்தாதவாறு செய்வது சிக்கலான பிரச்சினையாகவுள்ளது. பிரான்சில் இரத்த வங்கிகளின் வெப்பநிலையை உயர்த்த முயன்று, உரிய நேரத்தில் உணரப்பட்டதால் அது தவிர்க்கப்பட்டுள்ளது.

பறந்து கொண்டிருக்கும் பயணிகள் விமானங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுத்து அனைத்துலக விமானப் போக்குவரத்தைக் குழப்புதல் முதல், நிதி குறித்த பல்வேறு கொள்ளையடிப்புகளும் குழப்பங்களும் செய்தல், மருத்துவக் குறிப்புகள் உட்படத் தனிப்பட்ட தரவுகளைக் களவாடுதல் எனப் பல்வேறு யாருமே எதிர்பார்க்காத குற்றச் செயல்கள் எல்லாம் அதிகரித்துக் கொண்டே செல்வது உலகம் முழுவதும் நிச்சயமற்ற தன்மைகளையும் நம்பிக்கையீனங்களையும் உருவாக்குகிறது. இத்தகைய இக்கட்டான காலகட்டத்தில், அடிபட்ட சிங்கமாக மாறியுள்ள ட்ரம்ப், ஈரான் மேலான பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தி தான் இழந்த அரசியல் பலத்தை மீளப்பெறச் சிந்திக்கலாம் என்கிற எண்ணம் உலகில் பலமாகவுள்ள நேரத்தில், உலகப் போர் எந்நேரமும் வரலாம் என்கிற அச்சம் தொடரத்தான் செய்கிறது.

காலநிலைச் சீர்கேடு உலக நிலையைப் பட்டினி நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறது. இன்று உலகம் வாழ்வா சாவா என்கிற போராட்டத்தை நடைமுறை வாழ்வாக்கிக் கொண்டிருக்கிறது. இவ்வேளையில், அரசற்ற தேச இனமாகவுள்ள ஈழத்தமிழர்களுக்கு ஜென்சி தலைமுறையின் தேவைகளை ஓரளவுக்காவது நிறைவு செய்ய, ஈழத்தமிழர்கள் தமக்குள் உள்ள வேற்றுமைகளையும் வெறுப்புக்களையும் கடந்து, ஒரே தேச இன மக்களாக எழுச்சிகொள்ள வேண்டும் என்பதே மாவீரர்களின் ஒரே விருப்பமாக இருக்கும் என்பதை இந்த மாவீரர் மாதத்தில் ஒவ்வொரு ஈழத்தமிழருக்கும் நினைவுபடுத்துவதை இலக்கு தனது இம்மாவீரர் மாதக் கடமையாகக் கருதுகிறது.

ஆசிரியர்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஒழிப்பும் புதிதாக உருவாகும் சட்டப் பொறிகளும்

விதுரன்

இலங்கையில் தசாப்தங்களாக மனித உரிமைகள், மனிதாபிமானங்கள் மற்றும் ஜனநாயகத்தின் குரல் வளையை நெரித்த 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதியானது, நாட்டின் சட்டத்தின் ஆட்சிக்குக் கிடைக்கும் வரலாற்றுத் திருப்புமுனையாகப் பார்க்கப்பட்டது.



தன்னிச்சையான தடுப்புக் காவல், பொலிஸ் அதிகாரிகளிடம் பெறப்படும் சந்தேகத்திற்கிடமான வாக்கு மூலங்களைச் சாட்சியமாக ஏற்பது, நிறைவேற்று அதிகாரத் தின் கட்டற்ற எல்லைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் மீதான கடுமையான கட்டுப்பாடுகள் போன்ற கொடூரமான கூறுகளுக்காக இச்சட்டம் தொடர்ச்சியாக நீடிக்கிறது.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது முன்மொழிந்துள்ள 'பயங்கரவாதத்திலிருந்து அரசினைப் பாதுகாக்கும் சட்டமூலம்', 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலம்' மற்றும் 'வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளிகளை தடுத்தல் சட்டமூலம்' ஆகிய உத்தேச சட்ட வரைபுகளை ஆழமாகப் பார்க்கின்றபோது அங்கு ஆபத்தான தந்திரோபாய முன்னெடுப்பு இடம் பெறுகின்றமை வெளிச்சத்துக்கு வருகிறது.

கிரேக்க புராணங்களில் வரும் 'லேர்னாவின் ஹைட்ரா' (Lernaean Hydra) எனப்படும் ஜலசர்ப்பத்தின் ஒரு தலையை வெட்டும்போது அதற்குப் பதிலாகப் பல தலைகள் முளைப்பது போல, பயங்கரவாதத் தடைச் சட்டத்திலிருந்து நீக்கப்படுவதாகக் கூறப்படும் கொடூரமான அடக்குமுறை அதிகாரங்கள், வடிவம் மாறி ஏனைய உத்தேச சட்டமூலங்களின் வழியே மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமையன்று அலரி மாளிகையில் இடம்பெற்ற 'முழுநாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டின் ஓராண்டு நிறைவு சர்வமத நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் பேரழிவில் இருந்து நாட்டை மீட்க வலுவானதொரு சட்டம் அவசியமென்று எடுத்துரைத்தார்.

உத்தேச ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புச் சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கைச் சுட்டிக்காட்டிய அவர், சந்தேகநபர்களை 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யும் காலப்பகுதியை 48 மணித்தியாலமாகக் குறைக்கவும், மதுவரிச் சட்டம் மற்றும் குற்றக் குழுக்களை இனங்காணும் சர்வதேச முறைகள் தொடர்பான சரத்துக்களைச் சட்ட மூலத்திலிருந்து நீக்கவும் அரசாங்கம் தயாராக இருப்பதாக உறுதியளித்தார்.

மேலும், நிலுவையிலிருந்த 36,000 இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகளை முப்படைகளின் உதவியு டன் விரைவுபடுத்துதல், கொழும்பில் புதிய உயர் நீதி மன்றங்களை நிறுவுதல் போன்ற நிறுவன ரீதியான சீர்திருத்தங்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், ஜனாதிபதியின் இந்த நெகிழ்வுப் போக்கு மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்தும் வாக்கு றுதிகளுக்கு மத்தியிலும், முன்மொழியப்பட்டுள்ள மூன்று சட்டமூலங்களின் ஒருங்கிணைந்த கட்டமைப்பு குடிமக்க ளின் குடிமை உரிமைகள் மீது தோற்றுவிக்கும் ஆபத்துக்கள் எள்ளளவும் குறைந்துவிடவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது என்பது, அதிலுள்ள கொடூரமான விதிகளின் இருப்பிடத்தை மட்டும் வேறு சட்டங்களுக்கு மாற்றுவதாக இருக்கக் கூடாது.

ஆனால், செப்டெம்பர் மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தை', அதனுடன் இணைந்த 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலம்' மற்றும் 'வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளிகளை தடுத்தல் சட்டமூலம்' ஆகிய சட்டமூலங்களுடன் வைத்து ஒப்பிடும்போது, அதிகாரங்கள் மறுவடிவம் பெறும் அவலம் அம்பலமாகிறது.

உதாரணமாக, நடைமுறையில் உள்ள பயங்கர வாதத் தடைச் சட்டம் பொலிஸ் அதிகாரிகளிடம் பெறப் படும் வாக்குமூலங்களைச் சாட்சியமாக ஏற்க வழிவகுத்தி ருந்தது. 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தில் அச்சரத்து நீக்கப்பட்டு, நீதிவான் முன்



னிலையில் அளிக்கப்படும் வாக்குமூலங்களுக்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டபோதிலும், ஒழுங்கமைக்கப் பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலத்தின் 46 முதல் 52 வரையிலான சரத்துக்கள், குறிப்பாகச் சரத்து 47 ஆனது, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் அளிக்கப்படும் குறிப் பிட்ட சில கையொப்பமிடப்பட்ட வாக்குமூலங்களை மீண் டும் நீதிமன்றத்தில் சான்றாக ஏற்றுக்கொள்ளும் கதவைத் திறக்கின்றது.

இதேபோல், 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தில் தடுப்புக் காவல் உத்தரவுகளுக்கு உயர் நீதிமன்ற மேற்பார்வை கோரப்பட்டிருந்தா லும், 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலத் தின்' 20 மற்றும் 21ஆம் சரத்துக்கள் நீதிவான் முன் ஆஜர் படுத்துவதற்கு முன் 72 மணித்தியால அவகாசத்தையும், பொலிஸுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு ஓராண்டு வரை தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கும் பரந்த அதிகாரத்தையும் வழங்குகின்றன. இதன் மூலம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடுமையாக விமர்சிக்கப்பட்ட தன்னிச்சையான தடுப்புக் காவல் முறைமை, 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம்' என்ற புதிய அடை யாளத்தின் கீழ் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மறுபுறம், 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாது காக்கும் சட்டமூலத்தை', வரைவில் சேர்க்கப்பட்டிருந்த தகவல் தொடர்பு இடைமறிப்பு, குறியாக்க நீக்கம் மற்றும் வங்கித் தகவல்களைப் பெறும் அதிகாரங்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச அமைப்புகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து வர்த்தமானி வெளியீட்டிலிருந்து நீக்கப்பட்டன.

ஆனால், அதில் அதீத கண்காணிப்பு அதிகாரங்கள் 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலத் தின்' 44 மற்றும் 45ஆம் சரத்துக்கள் மூலம் மீண்டும் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நீதிமன்ற உத்தரவு இன்றியே தொலைபேசி அழைப்பு விவரங்கள் மற்றும் இருப்பிடத் தரவுகளைப் பெற வழிவகுக்கும் இச்சரத்துக்கள் தனிமனித தனியுரிமையின் மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதலாகும்.

அத்துடன், 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்' மற்றும் 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலம்' ஆகிய இரண்டு சட்டமூலங்களுமே சந்தேகநபர்களைக் கைது செய்யவும் சோதனையிடவும் ஆயுதப் படைகளுக்கும் கடலோரக் காவல் படையினருக்கும் பரந்த அதிகாரங்களை வழங்குகின்றன.

சாதாரண சட்டம் ஒழுங்கு நடைமுறைப்பணிகளில் இராணுவப் பங்களிப்பை விரிவுபடுத்துவது, நாட்டின் ஜனநாயக மற்றும் குடியியல் தன்மையை முற்றிலுமாகப் பலவீனப்படுத்திவிடும்.

இச்சட்டங்களின் மிக ஆபத்தான பரிணாமம் என்பது சிவில் உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மீது இவை ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கமாகும். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களை வரையறுப்பதில் 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலம்' பயன்படுத்தும் அளவுகோல்கள் எல்லை மீறியவை.

அதன் சரத்து 4(2)இன் படி ஒருவரின் ஆடை, உடல் பச்சை அடையாளங்கள், கைச்சைகைகள், மொழி மற்றும் மனித தொடர்புகள் என்பன குற்றக் குழுவின் உறுப்பினராக அவரைக் கருதுவதற்குச் சான்றாகப் பயன்படுத்தப்படலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இணையவழி சமூகங்கள், முறைசாரா அமைப்புகள் மற்றும் அமைதியான முறையில் போராடும் சிவில் செயற்பாட்டாளர்களை எந்த நேரத்திலும் சந்தேகத் தின் கீழ் கைது செய்ய வழிவகுக்கும்.



மேலும், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாது காக்கும் சட்டமூலத்தின் 9–11 சரத்துக்கள் பயங்கரவாதத் திற்குப் பயன்படக்கூடிய பிரசுரங்களை வைத்திருப்பதைக் குற்றமாக்குவதும், 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலத்தின்' 14, 56 மற்றும் 65 சரத்துக்கள் முறையான அனுமதியின்றி நீதிமன்ற நடவடிக்கைகளைச் செய்தி வெளியிடுவதைக் கட்டுப்படுத்துவதும் ஊடகவிய லாளர்களின் குரல்வளையை நெரிப்பதாகவே அமைகின்றன.

இதேநேரம், 'வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளி களை தடுத்தல் சட்டமூலத்தின்' 5ஆம் சரத்து விசாரணைகள் மற்றும் பிணை தொடர்பில் இன்னும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பழைய நடைமுறைகளையே மேற்கோள்

தொடர்ச்சி: பக்கம் 15




மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரைகளாகக் காலங்காலமாகப் பண்ணையாளர்களால் கால்நடைகளை மானாவாரிப் பெரும்போக நெற்செய்கைக் காலத்தில் அந்தத் தரைகளில் மேயவிடும் இடங்களாகச் செங்கலடி, கிரான் பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட மயிலத்தமடு மற்றும் மாதவனை, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெவிளியாமடு, திபுலானை, வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உன்னிச்சைப் பகுதி, வாகரை பிரதேச செயலகப் பிரிவில் கட்டுமுறிவு ஆகிய இடங்கள் உள்ளன.



இதில் முக்கியமாக, மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை என்பது அதிகூடிய பசு, எருமை மாடுகள் மேயும் இடமாகப் பூர்வீக காலந்தொட்டு பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை மேயும் இடமாகப் பாவிக்கப்பட்டு வந்தபோதும், எந்தவித அச்சுறுத்தல்களோ, வெளிமாவட்டத் தவர்களின் அச்சுறுத்தல்களோ, அத்துமீறல்களோ அங்கு இருக்கவில்லை.

ஆனால், 2009 மே 18க்குப் பின்னர், தற்போது இலங்கை ஆட்சியாளர்களால், குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ வின் அரசாங்கம் செயல்பட்ட காலத்தில், விடுதலைப் புலிகள் இல்லாத காலத்தில் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைகளை வெளிமாவட்டச் சிங்களவர்களை வரவழைத்து நெற்செய்கைக்கும் ஏனைய பயிர்ச்செய்கைக்காகவும் அத்துமீறிக் காணிகளை வழங்கித் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கான அத்திவாரம் போடப்பட்டது.

இந்த விடயம் கடந்தகால மஹிந்த ஆட்சி, மைத்திரி ஆட்சி, கோட்டா ஆட்சி, ரணில் ஆட்சி என எல்லோருடைய ஆசீர்வாதங்களுடன் தொடர்ந்து, தற்போதைய அநுர ஆட்சியும் அதனைத் தொடர்கிறது. கடந்த 17 வருடங்களாகப் பண்ணையாளர்களுக்கு அச்சுறுத்தல்களும், மாடுகளை வெட்டியும் சுட்டும் கொலை செய்வதும் தொடர்கதைகளா கவே உள்ளன.



இதனைத் தடுக்கும் விதமாக மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள் பேச்சுவார்த்தைகள், கவன ஈர்ப்புப் போராட்டங்கள், நீதிமன்ற வழக்குகள் என 2011 தொடக்கம் தற்போது 2026 வரை தொடர்ச்சியாக முன்னெடுத்து, ஏறாவூர் நீதிமன்றம், கொழும்பு உயர் நீதிமன்றம் என் பவற்றில் அத்துமீறிய வெளிமாவட்டத்தவர்களை வெளியேற்றுமாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளின் அடிப்படையில், அந்த அத்துமீறிய வெளிமாவட்டத்தவர் களை வெளியேற்றுமாறு நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப் பட்டபோதும், அதனை நிறைவேற்றாதவர்களாக மாவட்ட அரச நிர்வாகம், பொலிஸ் திணைக்களம் என்பன தொடர் ந்தும் மௌனம் காத்து, மறைமுகமாக அத்துமீறிய வெளி மாவட்டத்தவர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட ஆதரவுகளை வழங்குவதையே காணமுடிகிறது.

நீதிமன்றத் தீர்ப்பின்படி, மாவட்ட அரச அதிபரும் பொலிஸாரும் சம்பந்தப்பட்ட வெளிமாவட்டத்தவர்களை வெளியேற்றவில்லை. மாறாக, அவர்கள் தொடர்ந்தும் பயிர்ச்செய்கை செய்வதற்கு அனுமதித்துள்ளனர்.



கடந்த 2026 மே 20ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வருகை தந்திருந்த ஜனாதிபதி அநுர அவர்கள், மேய்ச்சல் தரைக்காக 1570 ஏக்கர் நிலங்களை விடுவிப்பதாகக் கூறியிருந்தார். அவர் கூறிய வாக்குறுதி ஐந்து மாதங்கள் கடந்தும் நிறைவேற்றப் படவில்லை. மாறாக, மேய்ச்சல் தரைகளில் புல் மேயும் வழமையான காணிகளில் அத்துமீறி நெற்செய்கை பண்ண வெளிமாவட்டத்தவர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளமை திட்டமிட்டு மண்ணாளர்களை ஓரங்கட்டும் செயலாகவே உள்ளது.

கடந்த 02/11/2026 அன்று மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் முன்பாக இடம்பெற்ற கவன ஈர்ப்புப் போராட் டத்தின்போது கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் களான ஞா. ஸ்ரீநேசன், இ. ஸ்ரீநாத் ஆகியோர் மாவட்ட அரச அதிபரைச் சந்திக்கச் சென்றபோது, பொலிஸார் வாயிலில் வைத்து அவர்களைத் திருப்பி அனுப்பிய செயலானது கண்டிக்கத்தக்கதும், அவர்களுடைய சிறப்புரிமையை மீறியதுமாகும்.

1978ஆம் ஆண்டு இலங்கைச் சனநாயகச் சோசலி சக் குடியரசின் அரசியலமைப்பில் பாராளுமன்ற உறுப்பினர் களுடைய சிறப்புரிமை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அந்தச் சிறப்புரிமையை மட்டக்களப்பு அரச அதிபரும் பொலிஸாரும் மீறியுள்ளனர் என்பதை இந்தச் செயல் தெளிவாகக் காட்டியுள்ளது.

போராட்டத்தில் பங்கேற்றிருந்த பண்ணையாளர் கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஐவரை மட்டும் மாவட்டச் செயலாளர் தமது அலுவலகத்தில் வரவழைத்து, மேய்ச்சல் தரையில் அத்துமீறி விவசாயம் செய்பவர்களுக்கு எந்த இடையூறும் கொடுக்காவண்ணம் பண்ணையாளர்கள் தமது மாடுகளை மேய்க்கலாம் என்ற சாரப்படவே அவரு டைய கருத்து அமைந்திருந்தது.

பெரும் திரளான மக்கள் ஏன் போராட்டத்தை நடத்தி னர்,அவர்களுடையநியாயத்தன்மைகளைக்கேட்டறியக்கூட மாவட்ட அரச அதிபர் உதாசீனம் செய்த செயலையே அன்று காணமுடிந்தது. எந்த ஒரு போராட்டம் இடம்பெற்றாலும், அவர்களுடைய கோரிக்கைகளை மக்கள் முன்வந்து பதில்

பா.அரியநேத்திரன்

கூறுவதையே கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர்களால் கடைப்பிடிக்கப்பட்ட வரலாறுகள். ஆனால், முதல் தடவையாக அநுர அரசின் ஆட்சியில்தான் ஒரு மாவட்ட அரச அதிபர் பண்ணையாளர்களையும் பாரா ளுமன்ற உறுப்பினர்களையும் உதாசீனம் செய்துள்ளார் என்பதைக் காணமுடிந்தது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு, மாத வனையில் வெளிமாவட்டச் சிங்களவர்களைப் பயிர்ச்செய் கைக்காக அனுமதித்த அரச நிர்வாகம், சட்டரீதியாகக் காணி இல்லாதவர்கள், விவசாயம் செய்யும் காணி உரிமைகள் இல்லாதவர்கள், விவசாயப் பயிர்ச்செய்கைக்கான PLR பதிவு கமநல சேவை நிலையம் ஊடாக இல்லாதவர்களை எப்படி, எந்தச் சட்டத்தின் ஊடாகப் பயிர்ச்செய்கை செய்ய அனுமதித்தனர் என்பதற்கான பதிலை மாவட்ட அரச அதிபர் கூற மறுத்துள்ளார்.

அதேவேளை, தற்போதைய அநுர அரசு கூறும் தாரக மந்திரம்: “சட்டம் அனைவருக்கும் சமம்”. அப்படி யானால், மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை மேய்ச் சல் தரைகளில் அத்துமீறி விவசாயம் செய்யும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை வெளியேற்றுமாறு நீதிமன்றம் வழங்கிய சட்டத் தீர்ப்பை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை? சட்டம் எல்லோருக்கும் சமம் இல்லை என்றல்லவா அநுர அரசின் ஆட்சி தொடர்கிறது? அதுபோலவே, இலங்கையின் அதிஉயர் நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தேரர்களைக் கைது செய்யவில்லை. சட்டம் இருட்டறை என்பது இப்படியான வெளிச்சத்திற்கு வரும் விடயங்களை மூடி மறைப்பதாலோ, அப்படி சட்டம் இருட்டறையானது என நினைக்கத் தோன்றுகிறது.



மட்டக்களப்பு மேய்ச்சல் தரையில் வெளிமாவட்டத் தவரைக் குடியமர்த்தும் நிகழ்ச்சித் திட்டமான திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் ஒரு வேலைத்திட்டத்தை கடந்தகால மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஒரு

தொடர்ச்சி: பக்கம் 15



இலங்கைத் தீவின் வரைபடத்தில் தமிழர்கள் எங்கெல்லாம் அடக்கி ஒடுக்கப்படுகின்றனரோ, அந்த இடத்தை அடையாளப்படுத்தினால் அதுவே தமிழீழம் என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒருமுறை சொல்லியிருந்தார். அதுதான் இலங்கைத் தீவின் அன்றும் என்றுமான கதை. இன்றைய நாட்களில் கிழக்கில் மயிலத்தமடு மாதவனையில் நிலத்திற்கான போராட்டம் நடக்கின்ற அதேவேளையில் வடக்கில் பலாலியில் நிலத்திற்கான போராட்டம் பல்வேறு தடைகளின் மத்தியில் தொடர்கிறது. இன்றைய காலத்தில் நிலத்திற்காக போராட்டம் நடக்கிற இடமும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு நடக்கிற இடமும் இலங்கைத் தீவின் வரைபடத்தில் குறித்தால் அதை தமிழர் தேசம் என்று அடையாளப்படுத்தலாம். இலங்கையில் இன்னமும் தொடர்கின்ற ஆக்கிரமிப்பை வெளிப்படுத்துகிற வரைபடமே இதுவெனலாம்.

வீடென்ற கனவு



எந்தவொரு மனிதனுக்கும் வீடு என்பது பெருங் கனவு. நாம் வாழ்வது வீட்டில்தான். நாம் வாழ்வதே வீட்டுக் காகத்தான். வீடு ஒன்றை கட்டுவதற்காகவே பெரும்பாலான மனிதர்களின் வாழ்வு முடிந்துவிடுகிறது. உண்மையில் மனித வாழ்வின் நினைவுகள், உறவுகள், தலைமுறைகளின் வரலாறு, உழைப்பின் அடையாளம் ஆகிய அனைத்தையும் தன்னுள் கொண்டிருக்கும் ஒரு கொடியிடம்தான் வீடு. அந்த வீட்டிலிருந்து ஒருவன் வெளியேற்றப்படும்போது அவன் இழப்பது ஒரு கூரை என்ற பாதுகாப்பை மாத்திரமல்ல. தன்னுடைய வாழ்வின் முழுப்பகுதியையும் இழக்கிறான். அதற்குச் சாட்சிதான் பலாலி மக்களின் பெருந்துயர் மிக்க வாழ்க்கை.



1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்குப் பகுதியில் மீண்டும் தீவிரமடைந்த இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கை பின்னணியில் பலாலி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். பலாலி விமானப்படைத்தளம் மற்றும் காங்கேசன்துறைத் துறைமுகத்தைச் சுற்றிய பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு, அதன் எல்லைகள் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டன. வீடுகள், வயல் நிலங்கள், தோட்டங்கள், வழிபாட்டிடங்கள், பாடசாலைகள் என மக்களின் அன்றாட வாழ்வோடு பிணைந்திருந்த பெரும் நிலப்பரப்பு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. அங்கிருந்து வெளியேறியவர்கள் உறவினர் வீடுகளிலும், நலன்புரி நிலையங்களிலும், வாடகை வீடுகளிலும் தமது வாழ்க்கையைத் தொடர வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டனர்.



முடிவுறாத இடப்பெயர்வு

போர் முடிவடைந்த பின்னரும் இந்த மக்களின் நிலமிழந்த அகதி வாழ்வு முடிவுக்கு வரவில்லை. பல ஆட்சிகள் மாறிய பிறகும் இந்த மக்களுக்குத் தமது பூர்வீக நிலங்களுக்குத் திரும்புவதற்கான முழுமையான உரிமை கிடைக்கவில்லை. சில பகுதிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டன. ஆனால், பெருமளவான காணிகள் இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.2013ஆம்ஆண்டுவெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வலிகாமம் வடக்கில் 6,317 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டமை இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை மேலும் வெளிப்படுத்துகிறது.

இந்த நிலங்கள் பல தலைமுறைகளின் உழைப்பை தனக்குள் புதைத்து வைத்திருக்கிறது. கிணறு, வீடு, தோட்டம் என அத்தனையும் இந்த மக்கள் தமது உணர்வாலும் உழைப்பாலும் கட்டிச் சேர்த்த பெருஞ்சொத்துகள். அத்துடன் குழந்தைப் பருவத்தில் ஓடி விளையாடிய முற்றம், முன்னோர்கள் வாழ்ந்த நிலம் எனப் பல நினைவுகள் அந்த மண்ணோடு கலந்திருக்கின்றன. அவற்றை இழந்த மக்கள் இன்று தமது சொந்தக் காணிகளுக்குள் செல்ல முடியாதவர்களாக வீதியில் நிற்கின்றனர். மக்கள் இப்படி அலைந்துழல தமது நிலங்களில் இராணுவம் விவசாயம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், பெரும் வேதனை கொள்ளுகின்றனர்.

மக்களுக்கு எதிராக வழக்கு

இப்படியாகத் தொடர்கின்ற நில ஆக்கிரமிப்புக்கு எதிராக - நீண்டகால அநீதிக்கு எதிராக, பலாலி மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கினார்கள். 2026ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கிய தொடர் போராட்டம், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பலாலிச் சந்தியில் முன்னெடுக் கப்பட்டு வருகிறது. நவம்பர் மாதத் தொடக்கத்தில் இருபது வாரங்களை எட்டியுள்ள இந்தப் போராட்டத்தில், கொட்டும் மழையையும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மக்கள் பங்கேற்கின்றனர். வயது முதிர்ந்தவர்களும் பெண்களும் தமது நிலங்களை மீட்டெடுக்கும் நம்பிக்கையுடன் போராட்டக் களத்தில் நிற்கின்றனர். இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பூர்வீகக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் 2013ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்த லின் மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மக்களிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் தாம் தமது சொந்த இடங்களில் சுதந்திரமாக மீள்குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் தமது தீர்க்கமான கோரிக்கைகளை மக்கள் முன்வைத்துள்ளனர்.

ஆனால், நிலத்திற்காகக் குரல் எழுப்பும் மக்களின் போராட்டம் பல்வேறு தடைகளையும் எதிர்கொள்ள

தீபச்செல்வன்

நேரிட்டுள்ளது. போராட்ட இடத்தில் தற்காலிகக் கொட்டகை அமைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டதாகவும், குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் அகற்றப்பட்டதாகவும் மக்கள் கூறுகின்றனர். இந்நிலையில், கடந்த ஆகஸ்ட் 16ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தின்போது பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியதாகக் கூறி ஐவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட அந்த வழக்கு, பொலிஸார் முழுமையான அறிக் கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற உத்தரவுடன் டிசம்பர் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



ஜேவிபியின் அடக்குமுறை முகம்

கடந்த காலம் முழுவதும் வீதியில் நின்று போராட்டங்களைச் செய்து அதன் வழியாகவே அரசியல் செய்து வந்த ஜேவிபி இப்போது தங்கள் அடக்குமுறை முகத்தை பலாலி மக்கள் விடயத்திலும் காட்டுகிறது. மக்கள் தமது சொந்த நிலத்திற்காகப் போராடுவதற்காக எதிர்கொள்ளும் தடைகளும் வழக்குகளும், நிலப்பிரச்சினையின் அடிப்ப டையான அநீதியை மறைத்துவிட முடியாது. வீதியில் ஒன்றுகூடுவதற்கான உரிமையும், தமது வாழ்வாதாரத்தையும் பூர்வீக உரிமையையும் கோருவதற்கான உரிமையும் எங்கள் மக்களுக்கு உண்டு. போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமெனில் இலங்கை அரசாங்கம் ஆக்கிரமித்துள்ள நிலங்களை உடன் விடுவிக்க வேண்டும்.



அரசியல் ரீதியில் மக்களை ஏமாற்றிப் பேசுவ தும் கடந்த கால அரசு போல விடுவித்தல் நாடகங் களை செய்வதுமாக காலத்தை இழுத்தடிக்காமல், மீள்குடியேற்றத் திற்கான வசதிகளும் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப் புவதற்கான ஏற்பாடுகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தமது சொந்த மண்ணில் வாழ்வதற்காக இன்னும் காத்தி ருக்கும் மக்களின் வாழ்நாளை மேலும் நீட்டிக்க அரசுக்கு

தொடர்ச்சி: பக்கம் 15



அண்மையில் (24.10.2026), சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தின் சிறுவர், மூத்தோர் தின மகிழ்வும், பரிசில் வழங்கலும், கலங்கரை சஞ்சிகை வெளியீடும் கதிரமலை சிவன் தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெற்றன. மாணவர் கள், பெற்றோர்கள், இலக்கிய ஆர்வலர்கள், மூத்தோர்கள், சிறுவர்கள் என அரங்கம் நிரம்பிய மக்களுடன் நிகழ்வு இனிதாக ஆரம்பமானது.



இந்தச் சிறுவர் கழக நெறியாளர் கவிதாமலர் சுதேஸ்வரன் அவர்களின் கலை இலக்கியச் சிந்தனை பாராட்டுக்குரியது. அதாவது, சிவன் சிறுவர் கழகத்தின் மூலம் அடுத்த தலைமுறைக்கு எதைக் கொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, அதற்கேற்றவாறாகத் தமது ஒவ்வொரு நகர்வையும் முன்னெடுத்து வருகின்றார்.

வாழும் போதே வாழ்த்துதல், சிறுவர் கழக அங்கத்தவர்களான சிறார்களே ஒவ்வொரு நிகழ்வுகளையும் கௌரவிப்புகளையும் நடத்துதல், இயற்கையோடு இணை ந்த வாழ்வியலைக் கடத்துதல், சிந்தனைத் திறனை வளர்த்து ஆக்க இலக்கிய முயற்சிக்கு சிறார்களை ஊக்குவித்தல், வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தெடுத்தல், தமிழர்களின் மரபுசார் பண்பாடுகளையும் கலாசார விழுமியங்களையும் இளையோர் மனங்களில் ஆழமாகப் பதித்தல், மூத்தோரைப் பேணுதலும் கௌரவித்தலும் என, எமது அடுத்த தலை முறையைச் சீராக வழிநடத்தும் ஓர் அற்புதமான நடை முறையை இவர்கள் எடுத்துச் செல்வதைப் பார்க்க முடிகிறது.



எமது இளம் பிள்ளைகள் தடுமாறி, தடம் மாறி வாழ்க்கையை அழித்து, தமது வாழ்நாளை வீணாக்கும் இக்காலத்தில், இத்தகைய சிறுவர் கழகங்கள் எமது சமூகத் திற்கு மிகவும் தேவையானதாகும்.

திட்டமிட்டுச் சீர்குலைக்கப்படுகிற எங்கள் குழந் தைகளின் எதிர்காலத்தைச் சீர்தூக்கி, சிகரத்தில் வைக்கவும், அவர்கள் உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் தமது திறமைகளுக்காகப் பேசப்படவும்,ஒரு சமூகமாக, ஒரே மக்களாக நாம் பல்வேறு நலப்பணிகளை ஆற்றக் கடமைப் பட்டுள்ளோம்.

சமூக மாற்றம், தனித்தன்மையோடு செயற்படுதல், பெயரும் புகழும் பெற்று விளங்குதல், இனத்தின் பெயரைப் பறைசாற்றுதல் என, அடுத்த சந்ததியை வழிநடத்தவேண்டிய விடயங்கள் பலவற்றை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. எமது இனத்தைத் தாங்கப்போகின்ற தூண்களை ஆற்றலும் ஆளுமையும் கொண்ட சகல திறன் வல்லுநர்களாக ஆக்குவதன் ஊடாகவே தமிழினம் மிளிர்ச்சியான வரலாற்றுத்தடத்தைப்பதிக்க முடியும்.

ஒரு இனமாகச் சிந்திக்கிறபோது, நாம் இணைந்து வாழ்வதும் சேர்ந்து செயற்படுவதும் மிக முக்கியமான தேவையாகவே உள்ளது. தற்போதைய சந்ததி அதைச் சரியாகச் செய்யாது விடுவதால் நாம் தவறவிடுகின்ற விடயங்கள் ஏராளம். இருப்பினும், இவ்வாறு அடுத்த தலைமுறையையேனும் “ஒன்றுபட்டால்தான்உண்டு வாழ்வு” எனும் நம்பிக்கையினூடாக வளர்த்தெடுக்கவேண்டும். அத் தகையகாலப்பணியையே சிவன் சிறுவர் கழகம் ஆற்றி வருகின்றது.



சுன்னாகம் எனும் தனிப்பெருமை வாய்ந்த மண் ணில் இத்தகையதொருசிறுவர்களுக்கான கழகத்தை நிறுவி, தன்னுடைய தனிமுயற்சியின் மூலம் மட்டும் ஏழு ஆண்டுகளைக் கடந்து பல வி(மு)த்துக்களை அந்த மண்ணில் முளைக்க வைத்துள்ளார் அதன் நிறுவுநர் கவிதாமலர் சுதேஸ்வரன். அவை நாளை நிச்சயமாக விருட்சமாக மாறி, வேரோடி, விழுதெறிந்து, மண்ணுக்கும் மக்களுக்கும் நிழல் தரும் என்பது நிதர்சனம்.

மழைக்காலநிலை இருந்தபோதும், எந்தத் தடை வந்தாலும் எமது எண்ணங்களைச் செயலாக்கியே தீர வேண்டும் என்பதில் உறுதியான சிந்தனை கொண்டு, நிகழ்வுகள் குறித்தநேரத்தில் ஆரம்பமாகின.கதிரமலை சிவன் தேவஸ்தான வெளிவீதியில் ஆரம்பமான இன்னிய இசை அணியினரின் பவனியானதுபார்ப்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.



விருந்தினர் அழைத்து வரப்பட்டு, அமரவைக்கப் பட்டமை அந்தக் கழகச் சிறார்களின் மேற்பார்வையி லேயே நடைபெற்றது. மேடையில்அலங்காரமாக, வந்திருந் தவர்களின் பார்வைக்கு விருந்தாக,சிவன் சிறுவர் கழகச் சிறுவர்களின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இத்தருணத்தில் முக்கியமானஒரு விடயம், அங்கு ஏற்றப்பட்ட சிரட்டையில்உருவாக்கப்பட்ட அடுக்குத் தீபம். அது உண்மையில் ஒரு கலைஞனின் உச்சமான திறன் என்றுதான் கூறவேண்டும். இந்த அடுக்குத் தீபமானது, அண்மையில் இடம்பெற்ற வடக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கைவினைப் பொருட்களுக்கான போட்டிக் கண்காட்சியில் தங்க விருதினைப் பெற்றிருந்தது. தேசிய விருது பெற்ற அந்த விளக்கை உருவாக்கியவர் யோ. வித்தகன் என்பவர். இவருக்கு சிவன் சிறுவர் கழகத்தினர்”புத்தாக்கச் செல்வர்”எனும் விருது வழங்கிக்கௌரவித்தனர்.



அதன்பின்,கலங்கரை எனும் சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது. புத்தகம் என்பது சாதாரணமான ஒருபொருள் அல்ல. அது அறிவுத்திறனையும் சிந்தனை விருத்தியையும் தருவதோடு, நாம் அறியாத பல வாழ்க்கை முறைகளை, வாழ்வியல் நடைமுறைகளை எல்லாம் எமக்குத் தந்து செல்வது.

அத்தகைய எண்ணப்பாங்கைஅடிமனதில் தான் மட்டும் கொண்டிராது,இளம் சிறார்களுக்கும்கொடுத்து விட வேண்டும் எனும் கழக நிறுவுநரின் அவாவே இந்தக் கலங்கரையின் பிரசவமாகும். விருந்தினர்களுக்கு வழங்குவதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் அனைத்திற்கும் ஓலையில் அலங்கார முடிச்சு இடப் பட்டிருந்தது.



அதன் பின்னர், மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. சீரான வருகை, ஆற்றலுடனான செயற்பாடு, மெய்ச்சுதலானதோற்றத்தோடு கழகத்திற்கு வருகை தருதல், கோலப்போட்டி, ஓவியப்போட்டி, ஆங்கிலப் போட்டி, வாசிப்புப் போட்டி, உயர் புள்ளி பெறுதல், தனித்திறமைகள் என, கழகத்திற்கு வெளியேயும் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றியோரின் திறமைகளை மேற்கோள் காட்டிப் பரிசில்கள் வழங்கப்பட்டன. புலமைப்பரிசில் பரீட்சையில் எழுபது புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

தொடர்ச்சி: பக்கம் 16



தமிழர்களின் நிலங்களை பாதுகாப்பது அனைவரதும் கடமை

மட்டு.நகரான்

இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சி செய்த எந்த அரசாங்கமும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி ஆளவே செய்கின்றது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக தமிழர்களினதும் புலம்பெயர் மக்களினதும் ஆதரவைப் பெறுவதற்காக பல்வேறு வாக்கு றுதிகளையும் நம்பிக்கையினையும் ஏற்படுத்தும் அரசுகள் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தமது பெரும்பான்மை எனும் கோரமுகத்தினை காட்டும் நிலைமையே இந்த நாட்டில் இருந்துவருகின்றது. நல்லாட்சி என்ற பெயரில் மைத்திரிபால சிறிசேனவினை ஆட்சி அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கும் அனுரகுமார திசாநாயக்கவினை ஆட்சி அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கும் வடகிழக்கு தமிழ் மக்கள் பாரியளவில் பங்களிப்பைச் செய்தார்கள்.



தமக்கான ஏதாவது தீர்வினை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையில் தமிழ் அரசியல் தலைமைகளின் பிழையான வழிகாட்டுதல்களும் தமிழ் மக்களை ஏமாற்றியதே வரலாறாக இருந்தது. அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினை ஆட்சி அதிகாரத் துக்கு கொண்டுவருவதற்கு வடகிழக்கு உட்பட புலம்பெயர் தமிழர்களும் ஆதரவை வழங்கியிருந்தனர்.

தமிழ் தேசியத்தினை உலகுக்கு கொண்டு சென்று எமது உரிமைக்கான குரலை வெளிக்கொண்டு வருவதற்காக வடகிழக்கில் கொண்டுவரப்பட்ட ஜனாதிபதி வேட்பாளரு க்கு ஆதரவு வழங்குவதற்கு பதிலாக பல புலம்பெயர் அமைப்புகளும் வடகிழக்கில் உள்ள தமிழ் புத்திஜீவிகளும் அனுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தமது ஆதரவை வழங்கியிருந்தனர். தேசிய மக்கள் சக்தி ஜனநாயக விழுமியங்கள், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி மற்றும் சமத்துவம் போன்ற விடயங்களை முன்னிறுத்திப் பிரச்சாரம் செய்தது.



வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் நீண்ட காலமாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளான காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல்,அரசியலமைப்பு ரீதியான நிரந்தர அரசியல் தீர்வு மற்றும் வடகிழக்கில் இராணுவக் குவிப்பைக் குறைத்தல் போன்ற பல கோரிக்கைகள் குறித்து அக்கட்சி பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. தென்னிலங்கையில் ஊழல் ஒழிப்பு மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மக்கள் அளித்த ஆணையை, வடகிழக்கு தமிழ் மக்களும் இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் ஒரு சாரார் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினை ஆதரித்தனர்.

எனினும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சி யைக் கைப்பற்றியதன் பின்னர், தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் போதிய தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அரசியல் தீர்வு குறித்த மௌனம், மாகாண சபை முறைமைக்கு அப்பால் சென்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அல்லது சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு குறித்து அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தத் தவறியுள்ளது. பழைய ஒற்றையா ட்சி முறைமைக்குள் தீர்வைக் திணிக்கும் முயற்சிகளே தொடர்வதாக தமிழ் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

குறிப்பாக பாராளுமன்ற தேர்தலில் வடகிழக் கில் தமிழ் மக்களின் மனோநிலையில் ஏற்பட்ட மாற்றமா னது இன்று அவர்களுக்கான தகுந்த படிப்பினையைக் கொடுத் துக்கொண்டிருக்கின்றது.வடகிழக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கச் சக்திகளினால் முன்னெடுக்கப்படும் செயற் பாடுகளை மறந்து புதிய ஒரு மேலாதிக்கச் சக்தியை ஆதரிக்கமுனைந்ததன் விளைவினை இன்று தமிழ் மக்கள் அனுபவித்துவருகின்றனர்.



இந்த நிலையில் கிழக்கில் மயிலத்தமடு மாதவனை பகுதியில் பயிர்ச்செய்கை என்னும் போர்வையில் முன் னெடுக்கப்படும் பாரியளவிலான திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கையாக இருக்கட்டும் திருகோணமலையில் முன் னெடுக்கப்படும் பௌத்த ஆதிக்க நிலையாக இருக்கட்டும் செம்மணி படுகொலையின் அறிக்கை தொடர்பான விடயங்களாக இருக்கட்டும் இவை அனைத்தும் தேசிய மக்கள் சக்தியின் உண்மை முகத்தினை தமிழ் மக்க ளுக்கு வெளிக்காட்டும் செயற்பாடுகளாகவே உள்ளன. இலங்கை யின் கிழக்கு மாகாணமானது பல்லின மக்கள் வாழும் ஒரு பிராந்தியமாகவும், வரலாற்று ரீதியாகத் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.


மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் பாரம்பரிய உரிமைகள் மீது நீண்ட காலமாகத் திட்டமிடப்பட்ட ஆக்கிரமிப்புகள் இடம்பெற்று வந்துள்ளன. இந்நிலையில், ஆட்சி மாற்றத் தைக் கொண்டுவந்த அநுர குமார திசாநாயக்க தலைமை யிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும், கிழக்கில் பௌத்த மேலதிக்க சக்திகளுக்குச் சாதகமாகவும், அவர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு மறைமுகமாக ஆதரவளிக்கும் வகையிலும் செயற்பட்டு வருவதை காண முடிகின்றது.

மயிலத்தமடு, மாதவனைப் பிரதேசங்கள் பாரம் பரியமாக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் பண்ணையாளர்கள் தலைமுறை தலைமுறையாகக் கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் வளமான பூமியாகும். இப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் மேய்ச்சல் தரைகள் அமைந்துள்ளதால், இது கிழக்கு மாகாணத்தின் பால் மற்றும் இதர தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய மையமாகத் திகழ்கிறது.

ஆனால், வெளி மாவட்டங்களிலிருந்து அத்து மீறி நுழைந்த பௌத்த துறவிகள் மற்றும் சிங்களக் குடியேற் றவாதிகளின் துணையுடன் இப்பூமி ஆக்கிரமிக்கப் பட்டு, பண்ணையாளர்களின் கால்நடைகள் மீது தாக்குதல் கள் நடத்தப்படுவதும், திட்டமிட்டு அழிக்கப்படுவதும் தொடர் கதையாகிவிட்டது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 'சட்டத்தின் ஆட்சி' மற்றும் 'நீதியான சமூகம்' பற்றிய வாக்குறுதிகளுடன் பதவியேற்ற போதிலும், மயிலத்தமடு பண்ணையாளர்களின் கண்ணீருக்கு இன்னும் உரிய நீதி கிடைக்கவில்லை.

நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் பண்ணையாளர்க ளின் உரிமைப் பத்திரங்கள் இருந்தபோதிலும், அத்து மீறல்களில் ஈடுபடும் தரப்பினருக்கு எதிராக உறுதியான சட்ட நடவடிக்கைகளை எடுக்கத் துறைசார் அமைச்சகங்களோ அல்லது காவல்துறையோ முன்வரவில்லை. மாறாக, ஆக்கிரமிப்பாளர்களுக்கும் பௌத்த மேலதிக்க சக்திகளுக் கும் மறைமுகமாக ஆதரவளிக்கும் வகையிலான செயற்பாடு களே முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

மயிலத்தமடு பண்ணையாளர்களுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை மிக மோசமான முறையில் விமர்சிக்கும் வடகிழக்கில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், அந்த போராட்டத்தினை மிகவும் கொச்சைப்படுத்தும் வகையிலும் நடந்துகொள்ளுவது என்பது எங்களது கைவிரல்களைக் கொண்டு எங்களது கண்களையே குத்தும் செயற்பாடுகளாக காணப்படுகின்றன.



மயிலத்தமடுவில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் செயற்பாடுகள் அப்பகுதியில் உள்ள மகாவலி மற்றும் பொலிஸாரின் முழுமையான ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அவற் றினை தடுத்து நிறுத்த வக்கற்ற தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவும் வடக்கினை சேர்ந்த அமைச்சர் சந்திரசேகரனும் போராட்டத்தினை கொச்சைப்படுத்தும் வகையிலான கருத்துகளை முன்வைத்துவருகின்றனர்.

மயிலத்தமடு போராட்டத்திற்கு அரசியல் சாயம் பூசுவதன் மூலம் இந்த போராட்டத்தினை கொச்சைப்படுத்தி அந்த மக்களின் உரிமைப் போராட்டத்தை இல்லாமல் செய் வதற்கு அல்லது திசை திருப்புவதற்கான முயற்சியாகவே இதனை பார்க்க வேண்டியுள்ளது. வடகிழக்கில் இவர்க ளுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு சரியான புரிதல் களை இந்த செயற்பாடுகள் மூலம் இவர்கள் வெளிப்படுத்தியிருக்கின் றார்கள். மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல் தரை களைக் காப்பதற்காகத் தமிழ் பண்ணையாளர்கள் நடத்தும் போராட்டம் என்பது வெறும் வாழ்வாதார உரிமைக்கான கோரிக்கை மட்டுமல்ல; அது தமிழர்களின் பூர்வீக இருப்புரி மைக்கான தற்காப்புப் போராட்டம் ஆகும்.

தொடர்ச்சி: பக்கம் 16



பிரிகேடியர் சு. ப. தமிழ்ச்செல்வன்:

ஒடுக்க முடியாத தமிழீழத்தின் அரசியல் குரல்

2 நவம்பர் 2007 – 2 நவம்பர் 2026

தமிழீழத்தின் வரலாறு என்பது வெறும் ஆயுதப் போராட்டத்தின் வரலாறு மட்டுமல்ல; அது அரசியல் அங்கீகாரம், தேசிய கௌரவம் மற்றும் தங்கள் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கும் அடிப்படை உரிமை ஆகியவற்றிற்காகப் போராடிய ஒரு தேசத்தின் வரலாறு. அந்த வரலாற்றில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமைத்துவத்தை, சுயநிர்ணய உரிமைக்கான தமிழ்த் தேசிய இயக்கத்தின் பயணத்தோடு பிரிக்க முடியாதபடி இணைத்தவர் பிரிகேடியர் சு. ப. தமிழ்ச்செல்வன்.



பிரிகேடியர் தமிழ்ச்செல்வன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், அந்த இயக்கத்தின் முதன்மையான இராஜதந்திரப் பிரதிநிதியாகவும் திகழ்ந்தார். சர்வதேச அரசாங்கங்கள் மற்றும் மத்தியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த அவர், தமிழீழத்தின் அரசியல் அபிலாஷைகளை உலக சமூகத்திற்கு எடுத்துரைக்கும் பொறுப்புமிக்க நபராகச் செயற்பட்டார்.

இலங்கை அரசாங்கங்கள் தொடர்ந்து மறுத்து வந்த ஒரு உண்மையை, மிகத் தெளிவாக முன்வைத்ததே அவரது அரசியல் பலமாகும்: தமிழ்த் தேசியப் பிரச்சினை என்பது சிறுபான்மையினருக்கான சலுகைகள் குறித்த விவகாரம் மட்டுமல்ல; அது ஒரு தேசம், தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை தொடர்பான விவகாரம் என்பதை அவர் வலியுறுத்தினார்.



சர்வதேச சமூகம் மோதலை பெரும்பாலும் 'பயங்கரவாதம்' மற்றும் 'தேசியப் பாதுகாப்பு' என்ற குறுகிய கண்ணோட்டத்தில் அணுகிய காலகட்டத்தில், தமிழ்ச் செல்வன் அரசியல் சுயாட்சி, பிராந்திய அதிகாரம் மற்றும் தமிழீழ தாயகத்தின் எதிர்காலம் குறித்த இராஜதந்திர உரையாடல்களில் பங்கேற்றார்.

தமிழீழத்திற்கான போராட்டம் என்பது அரசியல் நிறுவனங்கள், பேச்சுவார்த்தைகள் மற்றும் சர்வதேசத் தொடர்புகள் மூலமாகவும் முன்னெடுக்கப்பட்டது என்பதை அவரது தலைமைத்துவம் நிரூபித்தது.

அவரது மறைவிற்குப் பிறகு, மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்கள், தமிழ்ச்செல்வனின் பொறுப் புகளின் பரிமாணத்தை உணர்த்தும் வகையில் இவ்வாறு குறிப் பிட்டார்:

"அவரை நான் ஒரு சிறந்த தளபதியாகவும், ஈடு இணையற்ற அரசியல் தலைவராகவும், உலகத்தோடு உரை யாடிய இராஜதந்திரியாகவும், திறமையான பேச்சுவார்த்தை யாளராகவும் வளர்த்தெடுத்தேன்."

இந்த வார்த்தைகள், தமிழ்த் தேசிய இயக்கத்தில் தமிழ்ச்செல்வன் வகித்த இடத்தையும், அவரது இராஜதந்திரப் பணிகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தையும் பறை சாற்றுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே சர்வதேச மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகளில் அவர் முக்கியப் பங்காற்றினார். இந்தப் பேச்சுவார்த்தைகளின் ஊடாக, தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் குறித்த கேள்விகள் நேரடியாக சர்வதேச மத்தியஸ்தர்களின் முன்னால் வைக்கப்பட்டன. தமிழ்மக்களின் தாயகத்தின் எதிர்காலம் குறித்த பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற தளங்களில், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் என்பதே தமிழ்ச்செல்வனின் அரசியல் முக்கியத்துவமாகும்.



2007 நவம்பர் 2 அன்று, கிளிநொச்சியில் இலங்கை விமானப்படை நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில், பிரி கேடியர் தமிழ்ச்செல்வனும் ஏனைய ஐந்து விடுதலைப் புலி உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்.

சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் முன் னெடுக்கப்பட்ட அமைதி முயற்சி சீர்குலைந்து கொண்டி ருந்த சூழலில் நிகழ்ந்த இந்த மரணம், விடுதலைப் புலிக ளின் முதன்மையான அரசியல் பேச்சாளர்களில் ஒருவரை இழந்ததைக் குறித்தது.

இந்தக் கொலையைத் தொடர்ந்து, மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்: "இது எமது அமைதிப்புறாவைக் கொடூரமான முறையில் கொன்று விட்டது."

இந்தக் கூற்று ஒரு ஆழமான அரசியல் குற்றச் சாட்டை உள்ளடக்கியிருந்தது; அதாவது, ஒரு முக்கிய பேச்சாளரின் படுகொலையானது, அரசியல் உரையாடலை விட இராணுவ பலத்தின் ஆதிக்கம் மேலோங்கி வருவதை உணர்த்தியது.

அந்தக் காலகட்டத்தின் விளைவுகளை, அமைதி முயற்சியின் தோல்விகளை ஆராயாமல் புரிந்துகொள்ள முடியாது. சர்வதேச மத்தியஸ்தம் பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புகளை உருவாக்கிய போதிலும், அந்த முயற்சிகள் நீடித்த அரசியல் தீர்வை எட்டவோ அல்லது 2009-ல் இனப் படுகொலையின் உச்சக்கட்டத்தின் பேரழிவைத் தடுக்கவோ தவறிவிட்டன.

ஒரு அரசியல் அல்லது இராணுவ அமைப்பின் அழிவு, ஒரு மக்களின் கூட்டு உரிமைகளை இல்லாமலாக்கி விடாது. அதேபோல், இராணுவ வெற்றி என்பது, அடிப் படையான அரசியல் குறைகள் தீர்க்கப்பட்டுவிட்டன என் பதற்கான சான்றும் அல்ல.

இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்

ஈழஒளி

கூறலுக்கான தொடர்ச்சியான கோரிக்கைகள், இராணு வமயமாக்கல் மற்றும் நில ஆக்கிரமிப்பு குறித்த கவலைகள், மற்றும் தமிழர்களின் அரசியல் சுயநிர்ணய உரிமைக்கான நீண்டகாலக் கோரிக்கைகள் ஆகியவை, தமிழ் தேசியப் பிரச்சினை ஏன் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகத் தொடர்ந்து நீடிக்கிறது என்பதை உணர்த்துகின்றன.



குடிமை மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICESCR) ஆகியவற்றின் பொதுவான முதலாவது விதியின் கீழ், அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. இந்த உரிமையை சுதந்திரம் மற்றும் பிரிவினைக்கு பயன்படுத்துவது சட்டரீதியாக விவாதத்திற்குரியதாக இருந்தாலும், அர்த்தமுள்ள அரசியல் சுயநிர்ணய உரிமை என்ற கொள்கையை வெறுமனே புறக்கணிக்க முடியாது.



தமிழ் மக்களைப் பொறுத்தவரை, பொறுப்புக்கூறல், அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் கூட்டு உரிமைகள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலாக, அடையாள ரீதியான நல்லிணக்கத்தையோ அல்லது மேம்பாட்டுத் திட்டங்களையோ முன்வைக்க முடியாது.

நீதி இல்லாத நல்லிணக்கம் முழுமையற்றது. தமிழர்களின் அர்த்தமுள்ள பங்களிப்பு இல்லாத அரசியல் சீர்திருத்தம் போதுமானதல்ல. மேலும், சுயநிர்ணய உரிமைக்கான அடிப்படை கோரிக்கைகளை கவனத்தில் கொள்ளாத அமைதி, நிலையற்றதாகவே இருக்கும்.

எனவே, பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் அரசியல் மரபினை, தமிழ் தேசிய இயக்கத்தின் பரந்த வரலாற்றின் பின்னணியில் புரிந்துகொள்ள வேண்டும்; இதில் அவரது இராஜதந்திர ஈடுபாடுகள், அரசியல் நிறுவனங்களை உரு வாக்கும் முயற்சிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் (LTTE) செயற்பாடுகள் குறித்த சர்ச்சைகள் ஆகிய அனைத்தும் அடங்கும்.

அவர் மறைந்து பத்தொன்பது ஆண்டுகள் கடந்தும்,

தொடர்ச்சி: பக்கம் 16



மனிதனை மனிதன் தோள்தொட்டுத், தமிழனுக்குத் தமிழன் துணைநின்று மேற்கொண்ட மனிதக்கடல் ஒன்றின் யாத்திரை அது.

அன்றைய எங்கள் வாழ்வு எப்படி இருந்தது?

சிறீலங்காப் படையினரின் அகோர எறிகணைகள், குண்டு வீச்சுக்கள் மத்தியிலும், பொருண்மியத் தடைகளின் மத்தி யிலும் சிறிலங்காவின் சிங்களச் சேனைகள் உருவாக்கிய சிதைவுகளும், அழிவுகளும் தொடர, எப்போதும் போலவே... கல்வியும் இறை தரிசிப்பும், கடின உழைப்பும் மேன்மை கண்டு, நெறிபட வாழ்ந்திருந்தோம்.



தியாகசீலன் பூங்கா, ரஞ்சன் பூங்கா, கிட்டு சிறுவர் பூங்கா என அனைத்துமே... குழந்தைகள், சிறுவர்களுக்காக மனம்போல் பூத்திருந்தன. இதமான மனங்குளிரும் மாலைப் பொழுதுகள் தாய்மாரின் வருகைக்காக அங்கு, நேர்த்தியாக செப்பனிடப் பெற்றிருந்தன.

மானுட நேயம் தழைத்திருந்தது. உளவுரண் உரம் பெற்றிட தளபதி கிட்டு மிகுந்த அக்கறை காட்டினார். பண்டிதர் சரணாலயம், ஊர் தோறும் சனசமூக நிலையங்கள், நூலகங்கள் என, அறிவார்ந்த சூழலுக்குள் புடம் போடப்பட்ட மக்களாக எமது மக்கள் இருந்தார்கள். வீதிகள் எங்கும் தெருவெளி நாடகங்கள், கலைக்கூடங்களில் ஆடல், பாடல், அரங்கச் செயற்பாட்டு வழி பண்பட்ட சமூகமாக வாழ்ந் திருந்த மக்கள் எம்மக்கள்.

எப்போதும் அமைதியையே வரவேற்று காத்திருப் பர் முன்னர் ஒருபொழுது, காந்தி அடிகளார் யாழ்ப்பாணம் வந்திருந்த போது மக்களிடம் பணம் வசூலித்துக் கொடுத்து உதவிய மனம் வாய்க்கப் பெற்றவர்களாக எமது மக்கள் இருந்தனர். ஜோன் எவ் கென்னடி நினைவாக குழந்தைகளுக்கு பெயர்சூட்டி பாடசாலைகளில் இல்லங் களுக்கு பெயர் சூட்டி பெருமைப்படுத்தும் உன்னத இயல்பை வரமாக பெற்றவர் நாங்கள். இந்திராகாந்தி அம்மையார் படுகொலை செய்தி அறிந்த எம்மக்கள் தெருக்களில் சோக இசை ஒலிக்கவிட்டு தம் துக்கத்தை பகிர்ந்து வாழ்ந்த பரிவிரக்கமிக்கவர்கள்

இப்போது சொல்லுங்கள் மை லோர்ட் வில்லியம் கோல்டிங் கற்பனையில் வடிகட்டி சமூகமல்ல நாங்கள். செம்மணிக்கு பதில் தாருங்கள். தவறான திரிபுபடுத்தப்பட்ட முடிவுகளைக் கொண்டு நோபல் பரிசுக்காக அலையும் ஆய்வாளர்களை நிராகரியுங்கள்.

தென்னாபிரிக் பவள் கவச வாகனத்தையோ, இஸ்ரேலின் கொலை கிபீர் விமானத்தையோ உக்ரேனிய வாடகை விமானத்தையோ அல்ல இவற்றை பரீட்சை பார்க்க அனுமதித்த உலக சண்டியர்களின் பைத்தியக்காரத்தனம் வேறு வேறுவடிவங்களில் இன்னும் நீளுகிறது.

தமிழர் விரோத சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பொருண்மியத் தடைகள் திணிக்கப்பட்டிருந்தும். பசி, பட்டினி, நோய் எதுவுமின்றி... போஷாக்கு நிலையங்கள் முளைவிட்டு செழித்திருந்தன. போதாமை உள்ள இடங்களுக்கு திலீபன் மருத்துவமனை உள்ளூர் செஞ்சிலுவை தொண்டர்கள், சென் ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் தொண்டர்கள் விரைந்து மக்கள் பணியாற்றிக் கொண்டிருந்தன.

மனிதாபிமானம் செறிந்திருந்த தேசத்தில் எதற்காக சிறீலங்காப் படைகளின் குண்டு வீச்சு. எதற்காக சிறிலங்கப் படைகளின் ஆக்கிரமிப்பு ஆவேசம்.

தம்மைத் தாமே நெறிப்படுத்தி சீரமைத்துக் கொண்டு தலைசீவி பொட்டிட்டு கோவிலும் குளமுமாக பக்தி பரவசமும், நேர்த்திக்கடன்களும் அன்னதானமும் என இறை அருகாமையை உள்ளூர உணர்ந்திருந்த எம்மக்களுக்கு சிறிலங்கா மீட்புப்படை எதற்கு. பன்சாலைத் திணிப்பு ஏன்? எமக்கென்ன பன்சாலைமீது வெறுப்பா? இல்லையே. திட்டமிட்ட திணிப்பு ஏன் என்பதே எமக்கான பலமான கேள்வி

திலீபன் உண்ணா நோன்பிருந்த நல்லூரில் முருகப் பெருமானை காலங்காலமாக கொண்டாடி பரவசமுறும் எமது மக்கள் அலைகடல் என திரளும் போது அந்த புண்ணிய பூமி பூரித்துப்போகும். ஆலயத் தேரின் வடம்பிடிக்க வருவார்கள் கொம்பு சீவி குடல் உருவ இங்கு யாரும் வருவதில்லை மை லோர்ட்

தண்ணீர் பந்தலும், உள்ளூர் உற்பத்தி கண்காட்சியும் ஈருருளி பாதுகாப்பும் கரும்புலி அங்கயற்கண்ணியின் தாயாருக்குக் கச்சான் விற்று சீவிக்கும் வாய்ப்பும் என கையேந்தாத எமது மக்களுக்கு, எதற்காக சிறிலங்காப் படைகளின் மீட்சி நாடகம்.? எதற்காக இந்த போர்வெறி கொண்ட மண் ஆக்கிரமிப்பு யுத்தம்.?

எங்களிடம் உள்ளூர் சண்டைச்சரவுஇருந்தது.முட்டி மோதல் உரசல் எல்லாம் இருந்தன. இணக்கமுடன் அமைத்து நாங்களே சரிபார்த்தபடி வாழ்ந்து மகிழ்ந்திருந்தோம். நீதியும், சமதர்மமும் ஆரத்தழுவியிருந்தன. சமூக நம்பிக்கை இருந்தது சமூக முகாமைத்துவம் சீராக இருந்தது இன்னும் இருக்கிறது. சச்சரவுகளை விட, அவற்றைவிடவும் பலமடங்கு அர்ப்பணிப்பும் கருணையும் எம்மை வழிநடத்தின.



பலநூறு ஏக்கர்கள் வளம் கொழிக்கும் மண்ணின் மீது எதற்காக வல்வளைப்பு. சிறிலங்கா படையினரு க்கு காய் கனிகளின் உற்பத்திமீது ஏன் இந்த வன்மம். T 55 ரக ராங்கிகளின் சக்கரங்கள் பல்லு பதிக்கவா எங்கள் மண்ணுக்கு எரு இட்டு பண்படுத்தினோம். வளமான பயிர் களை சிதைந்து அழிப்பதற்குத்தானா இவைகள்

எமது நிலம் பிரான்சின் சிந்தனையாளர் ரூஷோ வின் நாயகர்களான எமக்கு உரியதே தவிர, அடிப்படையில் நல்ஆற்றலும் நற்பண்பியல்பும் கொண்ட எமது மக்களுக்கானதே தவிர மேற்குலகம் தூக்கிப் பிடிக்கும் இழிமனநிலை கொண்டவருக்கானது அல்ல மை லோர்ட்

செம்மணியை எங்கே கொண்டு புதைப்பதற்கு வழிவரைபடம் கீறப்பட்டு வருகிறது?

மேற்குலகம் நம்பு கிற ஏழை விடும் கண்ணீர் கூரியவாள் இற்குச் சமம் என்பதிலுள்ள இதே வாள் உங்கள் தலைமீதுதான் தொங்குகிறது என்பதையும் பணிவன்புடன் பகிர்ந்து கொள்ளுகிறோம்

நாடு தழுவிய கல்வி தரத்தில் அனைத்து துறை களிலும் முதன்மை சித்தியும் முதலிடமும் பெற்று சாதித்துக் கொண்டிருந்த இன்னமும் சாதித்துக் கொண்டிருக்கின்ற

அ. சுரேஷ் (மன்னார்)

எங்கள் மாணவச் செல்வங்களுக்கு கற்றல் வழிகாட்ட, சிந்திக்க பயிற்றுவிக்க பேராசான்கள் நல்அதிபர்கள் நல்ஆசிரியர்கள் புகழ்பெற்ற கல்லூரிகள், யாழ் வளாக சமூகத்தின் பக்கத்துணை யாவுமே மிக நேர்த்தியாக இருந்த பண்பாட்டு தலைநகரில் விகாரைகளைச் செருகுவதற்கு எத்தனை முண்டியடிப்பு..



அதுதான் எங்களை மீட்டு விடுவிக்கும், வாழ்வளிக் கும் என எப்படி நம்பவைக்கவும் நம்பவும் முடிகிறது. உலகம் இதை அறிந்திருக்கவில்லையா? இந்த உண்மையை ஒப்புக்கொள்ள உலகமனசாட்சி மரத்துத்தான் போய்விட்டதா?

யாழ் நூலகம் எரியூட்டிய காவாலித்தனத்தை இன்னும் அங்கீகரிக்கிறதா? மேற்குலக பள்ளிகளில் ஆங்கில இலக்கிய பாடத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட மன நிலை பிறழ்ந்ததாக கருதப்படும் மனிதச் சமூகம் அல்லவே நாங்கள்.

எம்மால், எம்மை ஆண்டு நிர்வகிக்க முடியாதவர் கள் என யார் உங்களுக்கு போதித்தவர்? ஆசியாவிலேயே தலைசிறந்த நூலகத்தை உருவாக்கி அதனைப் பேணிப் பராமரித்து பயன்படுத்திய அறிவு மரபும், சிந்தனை மரபும் இழையோடி நின்ற எமது மக்களா அதனை தீயிட்டு கொழுத்திய அற்பர்களா? யுவான் நோவா கராரி கணிப்பிட்டது போல இதில் யாருக்கு இத்தகைய உளச்சிக்கல் இருந்தது காட்டுமிராண்டித் தனம் இருந்தது.

ஐயா கனவான்களே, எந்த சமூகம் நம்பிக்கையற்ற ஒன்றாக உங்கள் கண்ணை உருட்டியது. மேற்குலக கனவான் கள் இன்னுமா இந்த போக்கினை நம்புகின்றனர்?

முடியுமானால் ஆசிரியர் வில்லியம் கோல்டிங் இன்னுமோரு Lord of the lies Part two ஈக்களின் நாயகன் பகுதி இரண்டு எழுதட்டும். எழுதி பாடத்திட்டங்களில் புகுத் தட்டும்

மனித நேயத்தோடும் உயர் பண்பாட்டும் விழு மியங்களோடும் செறிவும் செழுமையும் மிகு மொழி பேசி பகிர்ந்துண்டு வாழ்ந்த எமது சமூகத்தை, நம்பிக்கை கொள்ள முடியாதவர்களாக எதைவைத்து ஆய்ந்தறிந்தீர்கள்.

சிறிலங்கா நாட்டிற்கு ஆசிய மட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் முதன்முறை வெற்றியை படைத்துத் தந்த தமிழ் விளையாட்டு வீரன் நா. எதிர்வீரசிங்கம் சிறிலங்காவுக்கான வெற்றிக் கிண்ணத்துடன் நாட்டிற்கு திரும்புமுன்னரே தான் சார்ந்த சமூகம் 1958 இல் இனப்படுகொலைக்கு ஆளாகிவிட்டதே என்ற வருத்தம் இருந்தது. இவரது ஆற்றல், உங்கள் பார்வையில் இருக்கும் இதே இருண்ட மணிலிருந்தே வெளிப்பட்டது.

அது ஏன் பரிசீலிக்கப் படவில்லை. இதனைக் கண்டும் காணாமல் இருட்டடிப்புச் செய்த மேற்குலகின் மனநிலை இன்றும் பாறிப் போய்த்தான் கிடக்கிறதா? தமிழர்களின் தலைகளை நொருக்கு வதுதான் தீர்வு எனும் ஒக்ஸ்போர்ட் கனவான் லலித் அத்துலத் முதலியை கண்டு

தொடர்ச்சி: பக்கம் 16



மறுசீரமைப்புப் படலத்தில் மலையகப் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை எங்குள்ளது?

மருதன் ராம்

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் சூழலில், அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு மற்றும் விளிம்புநிலை மக்களின் உரிமைகள் சார்ந்த கோரிக்கைகள் மிக முக்கியமான விவாதப் பொருளாக மாறியுள்ளன. குறிப்பாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 33 அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைக் கலைப்பதற்கான அர சாங்கத்தின் அதிரடி நடவடிக்கைகள் ஒருபுறம் தீவிரமடைந் துள்ள நிலையில், மறுபுறம் மலையக மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு தனியான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றுள்ளது. இந்த இரண்டு முக்கிய நடவடிக்கைகளுக்கு மத்தியில், மலையகத் தமிழ்ப் பேசும் மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட "மலையகப் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை" தற்போது எத்தகைய விளிம்பில் நிற்கிறது என்பது குறித்த பலத்த கேள்விகள் எழுந்துள்ளன.



நாடளாவிய ரீதியில் செயற்றிறனற்ற மற்றும் பொருளாதாரச் சுமையாக மாறியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 33 அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைக் கலைப் பதற்கான நடவடிக்கைகளை நிதி, திட்டமிடல் மற்றும் பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சு தீவிரப்படுத்தியுள்ளது. அமைச்சரவையின் ஒப்புதலுடன் கடந்த மார்ச் மாதம் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட பிரத்தியேகப் பிரிவு இதற்கான பணிகளை முன்னெடுத்து வருகிறது. இதேவேளை, 2026 வரவு செலவுத் திட்ட யோசனைகளுக்கு அமைவாக, அரச நிறுவனங்களின் ஊழியர் சேமலாப நிதியம் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) மற்றும் பணிக்கொடை (Gratuity) கொடுப்பனவுகள் தொடர்பான நீண்டகால நிலுவை களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் திறைசேரி இறங்கியுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட 5 பில்லியன் ரூபாயில், 2.8 பில்லியன் ரூபாய் 2026 ஓகஸ்ட் மாத இறுதிக்குள் செலுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.



மறுபுறம், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் மோதல்கள் காரணமாக மூலப்பொருள் செலவுகள் அதி கரிப்பு, விநியோகச் சங்கிலித் தடங்கல்கள் மற்றும் முன்பதிவு இரத்து போன்ற பல்வேறு சவால்களை அரச நிறுவனங்கள் எதிர்கொண்ட போதிலும், 2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுடன் (227.8 பில்லியன் ரூபாய்) ஒப்பிடுகையில், 2026 இன் முதல் ஆறு மாதங்களில் 51 பிரதான அரச நிறுவனங்களின் மொத்த இலாபம் 259.3 பில்லியன் ரூபாயாக (31.5 பில்லியன் ரூபாய் அதிகரிப்பு) பதிவாகியுள்ளது. லாபமீட்டும் பிரதான வணிக நிறுவனங்களும், மறுபுறம் கலைக்கப்படும் 33 நிறுவனங்களும் ஒருபுறமிருக்க, வர்த்தக நோக்கம் அற்றதும் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டதுமான "மலையகப் புதிய கிராமங்கள் அபி விருத்தி அதிகாரசபை" இந்த நிறுவன மறுசீரமைப்புச் சுழலில் எங்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. குறிப்பாக கலைக்கப்பட உள்ள 33 அரச நிறுவனங்கள் குறித்த பட்டியல் எதுவும் இதுவரையில் வெளியாகவில்லை.



மலையக மக்களுக்கு என அமைக்கப்பட்ட அதிகார சபை கலைக்கப்படுமா என்ற அச்சம் எழுந்துள்ள சூழலில் மலையக மக்களின் உரிமைகளும், தனி ஆணைக்குழுக்கான கோரிக்கையும் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஒருபுறம் இடம்பெறுகையில், மறுபுறம் மலையக மக்களின் கல்வி, வாழ்வாதாரம், குடியுரிமை மற்றும் வறுமை உள்ளிட்ட பல தசாப்த காலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அவர்களுக்கெனத் தனியான ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் நாடாளுமன்றத்தில் வலி யுறுத்தியுள்ளார். 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் மலையக மக்கள் படிப்படியாகப் பல்வேறு உரிமைகளைப் பெற்றிருந்தாலும், ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் இன்றும் அவர்கள் கடுமையான சமூக, பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்தகால அரசாங்கங்கள் இப்பிரச்சினைகளுக் குத் தீர்வு காண்பதில் காட்டிய மெத்தனப்போக்கை விமர்சித்த அவர், தற்போதைய அரசாங்கமாவது உரிய கவனம் செலுத்தி தனியான ஆணைக்குழுவை அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். ஏனைய சமூகங்களுக்கு இணையாகச் சம உரிமையுடனும், கௌரவமாகவும் வாழ் வதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே இக்கோரிக்கையின் நோக்கமாக உள்ளது.

மலையகப் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையும் முரண்படும் நிர்வாகத் தகவல்களும்

மலையக மக்களின் வளர்ச்சிக்காகத் தனி நிறுவனம் ஒன்று தேவை என்ற அடிப்படையில், 2018ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மலையகப் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை, 2019 பெப்ர வரி முதல் செயற்பாடுகளை ஆரம்பித்தது. ஆனால், தற் போதைய அரசாங்கம் மேற்கொண்டுவரும் அரச நிறுவன மீளாய்வு நடவடிக்கைகள் இதன் மீதான நம்பிக்கையை உலுக்கியுள்ளன. பிரதமரின் செயலாளர் தலைமையிலான மீளாய்வுக் குழுவினால் நடாத்தப்பட்ட மீளாய்வில் (2024 டிசம்பர் - 2025 பெப்ரவரி), 124 நிறுவனங்கள் பரிசீலிக்கப்பட்டு பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டன. இதில் மலையகப் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையைத் தனி அதிகாரசபையாகத் தொடரச் செய்யாமல், அமைச்சின் கீழுள்ள ஒரு பிரிவாக மாற்றுமாறு பரிந்துரைக்கப்பட்டதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மறுபுறம், அதிகாரசபையை அமைச்சின் ஒரு பிரிவாக மாற்றும் திட்டம் இல்லை என்றும், அதனை மேலும் மேம்படுத்துவதற்காகவே செயற்பாடுகள் மீளாய்வு செய்யப் படுகின்றன என்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந் தார். 2025 டிசம்பர் மாத நாடாளுமன்ற முன்னேற்ற அறிக் கையில் அதிகாரசபை தனி அதிகாரசபையாகவே பட்டியலிடப்பட்டிருந்தது. மேலும், 2025இல் 42.5 மில்லியன் ரூபாயும், 2026இல் 85 மில்லியன் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறினாலும், உண்மையான நிதி விடுவிப்பு மற்றும் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் குறித்து தொடர்ந்த வெளிப்படைத்தன்மை தேவைப்படுகிறது. எனவே, மலையக மக்களுக்கெனத் தனியான ஆணைக்குழு வேண்டும் என்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையும், மறுபுறம் மலையக மக்களின் மேம்பாட்டுக்காக ஏற்கனவே சட்டபூர்வமாக உருவாக்கப்பட்ட ஒரு பிரத்தியேக அதிகார சபையை அமைச்சின் ஒரு சிறிய பிரிவாகத் தரமிறக்கும் அல்லது கலைக்கும் பரிந்துரைகளும் ஒரே நேரத்தில் விவாதிக்கப்படுவது பாரிய முரண்பாடாகும்.



பொருளாதார மீட்சி மற்றும் செலவினக் குறைப்பு என்ற பெயரில் அரசு மேற்கொள்ளும் நிறுவன மறுசீரமைப்பு நடவடிக்கைகள், பல தசாப்தங்களாக விளிம்புநிலையில் வாழும் மலையக மக்களின் சமூக அபிலாஷைகளையும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கான நிறுவனக் கட்டமைப்புகளையும் பலவீனப்படுத்திவிடக் கூடாது. இந்த விடயத்தில் அரசாங்கம் தனது மௌனத்தைக் கலைத்து மலையகப் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை யின் தற்போதைய உண்மையான நிர்வாக நிலை (தனி அதிகாரசபையா அல்லது அமைச்சின் பிரிவா?) பற்றிய தெளிவான அறிக்கையை வெளியிட வேண்டும். நாடாளு மன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் கோரியது போன்று, மலையக மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தனி ஆணைக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும். இல்லையேல், நிறுவன மறுசீரமைப்பு என்ற பெயரில் மலையக மக்களின் வளர்ச்சிக்கான பிரத்தியேகக் குரல்கள் ஒடுக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுவதுடன் மலையக மக்கள் மத்தியில் இது பதற்றத்தையும் ஏற்படுத்தும்.

• • •



சென்ற வாரத் தொடர்ச்சி (இரண்டாம் பாகம்)

இலங்கையில் பொறுப்புக்கூறல் தொடர்பான பரந்த வரலாறு இந்தக் கவலைகளைக் குறிப்பாகக் கூர்மையாக்குகிறது. தனது 2025 ஆம் ஆண்டுக்கான அவதானிப்புகளில், கட்டாயக் காணாமலாக்கல்கள் மீதான ஐக்கிய நாடுகள் குழு, 1970-களுக்கும் 2009-க்கும் இடையில் கட்டாயக் காணா மலாக்கல்கள் பரவலாக இருந்த நடைமுறையையும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அது ஏற்படுத்திய சமமற்ற தாக்கத்தையும், காணாமலாக்கல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கக் குறைந்தது பதினொரு விசாரணை ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டதையும் குறிப்பிட்டது.



அக்குழு, பொறுப்புக்கூறல், இராணுவ அதிகார வரம்பு மற்றும் உள்நாட்டுச் சட்டப் பாதுகாப்புகளின் செயல் திறன் குறித்தும் கவலைகளை எழுப்பியது.

இந்தக் கண்டுபிடிப்புகள் ஒரு அடிப்படைப் பிரச்சி னையை வெளிப்படுத்துகின்றன: மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு முயற்சிகள், கூறப்படும் மீறல்களின் அளவுக்கும் தீவிரத்திற்கும் ஏற்ற பொறுப்புக் கூறலை ஏற்படுத்தவில்லை.

ஒரு அரசு, திறம்பட்ட விசாரணைகளையும் வழக் குத் தொடர்வுகளையும் நடத்தத் தவறும்போது, சர்வதேச ஆய்வுக்கு எதிரான ஒரு கேடயமாக உள்நாட்டு அதிகார வரம்பை காலவரையறையின்றிப் பயன்படுத்த முடியாது.

உள்நாட்டு அதிகார வரம்பு என்பது சர்வதேச சட்டக் கடமைகளிலிருந்து விலக்கு அளிப்பதல்ல. இறையாண்மை என்பது, கடுமையான மீறல்களை விசாரித்து பயனுள்ள தீர்வுகளை வழங்கும் கடமை உட்பட, பொறுப்பை உள்ளடக்கியது.



உள்நாட்டு வழிமுறைகள் அந்தக் கடமைகளை நிறைவேற்ற இயலாத அல்லது விரும்பாத நிலையில், சுதந்திரமான சர்வதேசப் பொறுப்புக்கூறல் அவசியமாகிறது. கட்டாயக் காணாமலாக்கல்களும் உண்மைக்கான சர்வதேச உரிமையும்

2016-ல் இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட, கட்டாயக் காணாமலாக்கலில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையால் செம்மணி வழக்கின் சட்ட முக்கியத்துவம் மேலும் வலுப்படுத்தப் படுகிறது.

சரத்து 12, கட்டாயக் காணாமலாக்கல் குறித்த குற்றச்சாட்டுகளைத் தகுதிவாய்ந்த அதிகாரிகள் ஆராய்ந்து, தேவைப்படும் இடங்களில் முழுமையான மற்றும் பாரபட் சமற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோருகிறது.



சரத்து 24, பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அங்கீகரிக்கிறது; இதில், ஒரு கட்டாயக் காணாமலாக்கலின் சூழ்நிலைகள், விசாரணைகளின் முன்னேற்றம் மற்றும் முடிவுகள், காணாமல் போன நபரின் கதி ஆகியவை குறித்த உண்மையை அறிந்துகொள்ளும் உரிமையும் அடங்கும்.

சரத்து 24(3), காணாமல் போன நபர்களைத் தேடி, கண்டு பிடித்து, விடுவிப்பதற்கும், மரணம் ஏற்பட்டால், அவர்க ளின் உடல்களைக் கண்டுபிடித்து, மதித்து, திருப்பி ஒப்படைப் பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மேலும் கோருகிறது.

செல்வி
ரேணுகா இன்பக்குமார்
வழக்கறிஞர்
நியூசவுத்வேல்ஸ், அவுஸ்திரேலியா

இராணுவக் காவலில் வைக்கப்பட்டு, மீண்டும் காணப் படாத உறவினர்களைப் பற்றிய தகவல்களைப் பல தசாப் தங்களாகக் கோரி வரும் தமிழ் குடும்பங்களுக்கு இந்த விதிகள் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தவை.

பொருந்தக்கூடிய அதிகார வரம்பு மற்றும் காலத் தேவைகளுக்கு உட்பட்டு, காணாமல் போன நபரின் கதி அல்லது இருப்பிடம் மறைக்கப்பட்டிருக்கும் வரை, கட்டாயக் காணாமலாக்கம் தொடர்புடைய சர்வதேச சட்டக் கட்டமைப்பின் கீழ் ஒரு தொடர் குற்றமாக அங்கீகரிக் கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் ஏற்புரையானது, இலங் கையில் அது நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் செய் யப்பட்ட ஒவ்வொரு செயலுக்கும் தானாகவே பின் னோக்கிய குற்றவியல் பொறுப்பை உருவாக்காது என்றா லும், புலனாய்வு, காணாமல் போனவர்களைத் தேடுதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் தொடர்பான அரசின் தற்போதைய கடமைகள் மிகவும் பொருத்தமானவை யாகவே இருக்கின்றன.

செம்மணியில், மீட்கப்பட்ட எச்சங்கள், முன்னர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட நபர்களுடன், குறிப் பாகப் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் காணாமல் போனதாகக் கூறப்படும் நபர்களுடன் பொருந்துகின்றனவா என்பதைப் புலனாய்வாளர்கள் ஆராய வேண்டும் என இந்தக் கடமைகள் கோருகின்றன.

எனவே, டி.என்.ஏ. அடையாளம் காணுதல், நம்பக மான தடயவியல் காலக்கணிப்பு, காணாமல் போனோர் பதிவுகள் மற்றும் வரலாற்றுச் சாட்சி வாக்குமூலங்கள் ஆகியவை ஒரு ஒருங்கிணைந்த புலனாய்வுச் செயல் முறையின் பகுதியாக அமைய வேண்டும்.



காணாமல் போனவர்களின் தாய்மார்களுக்கும் குடும்பங்களுக்கும், உண்மைக்கான உரிமை என்பது வெறும் அரசியல் கோரிக்கை மட்டுமல்ல. அது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உரிமையாகும். புலனாய்வுச் செயல்முறையில் அவர்களின் பங்கேற்பு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். மேலும், அவர்கள் அச்சுறுத்தல், பழிவாங்கல் மற்றும் தலையீடுகளுக்கு எதி ராகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

காணாமல் போனவர்களின் கதியை நிறுவுவதில் தொடரும் தோல்வியை, காலம் கடந்துவிட்டதன் ஒரு துரதிர்ஷ்டவசமான விளைவாக இயல்பாக்க முடியாது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் தமிழ் குடிமக்களின் பாதுகாப்பும்

இலங்கையில் ஆயுத மோதலின் போது பொருந்தக்கூடிய சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படையிலும் செம்மணி ஆய்வு செய்யப்பட வேண்டும்.



1949 ஆம் ஆண்டின் நான்கு ஜெனீவா உடன்படிக் கைகளின் பொதுவான பிரிவு 3, போர்களில் தீவிரமாகப் பங்கேற்காத நபர்களுக்கு, பொதுமக்கள் மற்றும் போரிட இயலாத நிலையில் உள்ள தனிநபர்கள் உட்பட, குறைந்த பட்சப் பாதுகாப்புகளை நிறுவுகிறது.

இது கொலை, கொடூரமான நடத்தை மற்றும் சித்திரவதை உட்பட, உயிருக்கும் உடலுக்கும் எதிரான வன்முறையையும், அத்துடன் தனிப்பட்ட கண்ணியத்திற்கு எதிரான அத்துமீறல்களையும் தடை செய்கிறது.

இந்தப் பாதுகாப்புகள் சர்வதேசமல்லாத ஆயுத மோதல்களுக்குப் பொருந்தும்; மேலும், மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் கட்டுப்படுத்துகின்

தொடர்ச்சி: பக்கம் 15



2026ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெற்ற அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய தேர்தல்கள் சர்வதேச அரசியல் (International Politics) மற்றும் உலகளாவிய அதிகாரச் சமநிலையில் (Global Balance of Power) புதிய அரசியல் மாற்றங்களுக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக ஈரான் போர் (Iran War), உக்ரைன் போர் (Ukraine War), மத்திய கிழக்குப் பிராந்தியப் பாதுகாப்பு (Regional Security), நேட்டோ (NATO) மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான (European Union) உறவுகள் ஆகியவற்றில் இந்தத் தேர்தல்களின் தாக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது.



அமெரிக்காவில் நவம்பர் 3ஆம் திகதி நடைபெற்ற இடைக்காலத் தேர்தலில் (Midterm Elections) ஜனநாயகக் கட்சி (Democratic Party) பிரதிநிதிகள் சபை (House of Representatives) மற்றும் செனட் சபை (Senate) ஆகிய இரண்டிலும் பெரும்பான்மையைக் கைப்பற்றியுள்ளது. இது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக் கட்சிக்கு (Republican Party) குறிப்பிடத்தக்க அரசியல் பின்னடைவாகும். இருப்பினும், ட்ரம்ப் தனது ஜனாதிபதிப் பதவியைத் தொடர்ந்து வகிப்பதுடன், வெளிநாட்டுக் கொள்கை (Foreign Policy) மற்றும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்களையும் (Executive Powers) தக்கவைத்துள்ளார்.



உள்நாட்டு அரசியலில் (Domestic Politics) இந்த முடிவு நிர்வாகத்தின் கொள்கைகளைக் கண்காணிக்கும் காங்கிரஸின் அதிகாரத்தை அதிகரிக்கின்றது. குறிப்பாக ஈரான் போருக்கான செலவுகள், வாழ்க்கைச் செலவு உயர்வு (Cost of Living), எரிசக்தி விலை அதிகரிப்பு (Energy Price Inflation) மற்றும் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை ஆகியவை அரசியல் விவாதங்களின் மையமாக மாறியுள்ளன. ஜனநாயகக் கட்சி நிர்வாகத்தின் இராணுவ மற்றும் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணிக் கக்கூடிய அரசியல் சூழல் உருவாகியுள்ளது.

இஸ்ரேலில் அக்டோபர் 27ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலும் (Parliamentary Elections) தெளிவான ஆட்சிப் பெரும்பான்மையை உருவாக்கவில்லை. பெஞ்சமின் நெதன்யாகுவின் லிகுட் கட்சி (Likud Party) 27 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அவருக்கு ஆதரவான அரசியல் கூட்டணி 53 ஆசனங்களையும், எதிர்க்கட்சித் தரப்பு 48 ஆசனங்களையும் பெற்றுள்ளன. அரபு அரசியல் கட்சிகள் 19 ஆசனங்களைப் பெற்றுள்ளன. இதனால் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான கூட்டணி அரசியல் (Coalition Politics) முக்கியத்துவம் பெற்றுள்ளது.



இந்தத் தேர்தல் இஸ்ரேலின் பாதுகாப்புக் கொள்கை (National Security Policy), காசா போர், ஈரானுடனான மோதல் மற்றும் சர்வதேச உறவுகள் ஆகியவற்றில் எதிர்கால மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக நெதன்யாகுவின் அரசியல் எதிர்காலம் மற்றும் புதிய அரசாங்கத்தின் கூட்டணி அமைப்பு, இஸ்ரேலின் பிராந்திய இராணுவ மற்றும் இராஜதந்திர அணுகுமுறையை (Military and Diplomatic Strategy) தீர்மானிக்கும் காரணிகளாக அமையும்.

2026ஆம் ஆண்டின் மிகப்பெரிய புவிசார் அரசியல் நெருக்கடிகளில் (Geopolitical Crises) ஒன்றாக ஈரான் போர் காணப்படுகின்றது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகள், அதற்கான ஈரானின் பதிலடி நடவடிக்கைகள் மற்றும் ஹோர்முஸ் நீரிணையைச் (Strait of Hormuz) சுற்றியுள்ள பாதுகாப்பு நெருக்கடிகள் சர்வதேச எரிசக்திச் சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்க இடைக்காலத் தேர்தல் முடிவுகள் ட்ரம்ப் நிர்வாகத்தின் மீது இராஜதந்திரத் தீர்வுக்கான (Diplomatic Settlement) அழுத்தத்தை அதிகரிக்கக்கூடும். அதேவேளை, காங்கிரஸின் எதிர்ப்பு மட்டும் ஜனாதிபதியின் இராணுவ அதிகாரங்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவராது. எனவே, ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதா அல்லது இராணுவ அழுத்தத்தைத் தொடர்வதா என்பது அமெரிக்காவின் முக்கியமான மூலோபாயத் தீர்மானமாக இருக்கும்.



உக்ரைன் போரிலும் அமெரிக்கத் தேர்தல் முடிவுகள் புதிய அரசியல் வாய்ப்புகளையும் சவால்களையும் உருவாக்கியுள்ளன. ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் பெரும்பான்மை உக்ரைனுக்கான இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை (Military and Financial Assistance) மீண்டும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கலாம். குறிப்பாக வான்பாதுகாப்பு அமைப்புகள் (Air Defence Systems) மற்றும் பாதுகாப்பு உதவிகள் தொடர்பான விவாதங்கள் முக்கியத்துவம் பெறும்.

A.M.L லம்பேட்

இருப்பினும், ரஷ்யாவுடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ட்ரம்பின் பேச்சுவார்த்தை அணுகுமுறை (Negotiation Strategy) தொடரக்கூடும். உக்ரைனின் இறையாண்மை (Sovereignty), பிராந்திய ஒருமைப்பாடு (Territorial Integrity) மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு உத்தரவாதங்கள் (Security Guarantees) ஆகியவை எந்தவொரு சமாதான உடன்படிக்கையிலும் முக்கியமான கேள்விகளாக இருக்கும்.

அமெரிக்காவின் புதிய காங்கிரஸ் அமைப்பு நேட்டோவுடனான உறவுகளில் ஓரளவு அரசியல் சமநிலையை உருவாக்கலாம். ஜனநாயகக் கட்சி ஐரோப்பிய கூட்டாளிகளுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை (Defence Cooperation) வலுப்படுத்துவதற்கு ஆதரவளிக்கக்கூடும். இருப்பினும், ஐரோப்பாவின் பாதுகாப்புச் செலவுகள் (Defence Spending), அமெரிக்க இராணுவப் பங்களிப்பு மற்றும் உக்ரைனுக்கான ஆதரவு தொடர்பான கருத்து வேறுபாடுகள் தொடரலாம்.



இதனால் ஐரோப்பிய நாடுகள் மூலோபாயத் தன்னாட்சி (Strategic Autonomy) மற்றும் தனித்துவமான பாதுகாப்புத் திறன்களை (Independent Defence Capabilities) வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய தேர்தல் முடிவுகள் தனித்தனியான உள்நாட்டு அரசியல் நிகழ்வுகளாக மட்டும் பார்க்கப்பட முடியாது. அவை மத்திய கிழக்கு பாதுகாப்பு, ரஷ்யா-உக்ரைன் மோதல், அமெரிக்க-ஐரோப்பிய உறவுகள் மற்றும் உலகளாவிய வல்லரசுப் போட்டி (Great Power Competition) ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளன.

எனினும், தேர்தல் முடிவுகள் உடனடியாக வெளிநாட்டுக் கொள்கையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கருத முடியாது. அமெரிக்க ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள், காங்கிரஸின் சட்டமன்றக் கட்டுப்பாடுகள், இஸ்ரேலின் கூட்டணி அரசியல் மற்றும் பிராந்திய வல்லரசுகளின் நலன்கள் ஆகியவை எதிர்கால அரசியல் திசையைத் தீர்மானிக்கும்.

எனவே, 2026ஆம் ஆண்டின் இந்தத் தேர்தல் மாற்றங்களை உலக அரசியலில் புதிய அதிகாரச் சமநிலைக்கான (Emerging Global Power Dynamics) முக்கியமான அரசியல் கட்டமாகப் புரிந்துகொள்ள முடியும்


• • •



அமெரிக்க இடைக்காலத் தேர்தல்கள் மாறிவரும் உலக ஒழுங்கு குறித்து நமக்கு உணர்த்துவது என்ன?

தமிழில்: ஆர்தீகன்

அமெரிக்க இடைக்காலத் தேர்தல்கள் உலகளாவிய கவனத்தை ஈர்த்துள்ளன. இது இயல்பானதே; ஏனெனில், சர்வதேச விவகாரங்களில் அமெரிக்காவின் செல்வாக்கு குறைந்து வந்தாலும், அது இன்னும் கணிசமான அளவிலேயே உள்ளது. அமெரிக்க வாக்காளர்கள் எடுக்கும் முடிவுகள் அமெரிக்க எல்லைகளுக்கு அப்பால் உள்ள மக்களையும் பாதிக்கின்றன.



இருப்பினும், மிக முக்கியமான மாற்றங்கள் அமெரிக்காவிற்குள்ளேயே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அங்கு நிலவும் தீவிரமான அரசியல் மோதல்கள், ஆழமான சமூக மற்றும் அரசியல் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. குடியேற்றம், வர்த்தகம் மற்றும் சர்வதேச அமைப்பின் நிலைத்தன்மை போன்றவை இதில் பங்கு வகித்தாலும், இதற்கான அடிப்படை காரணங்கள் பெரும்பாலும் உள் நாட்டுச் சூழல் சார்ந்தவை.



இது, ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட நமது உலகின் முரண்பாடுகளில் ஒன்றை வெளிப்படுத்துகிறது; அதாவது, உள்நாட்டு விவகாரங்களுக்கும் வெளிநாட்டு விவகாரங்களுக்கும் இடையிலான வேறுபாடு மங்கிக் கொண்டிருக்கிறது.

இவை இரண்டும் ஒருபோதும் முழுமையாகத் தனித் தனியாக இருந்ததில்லை; இருப்பினும், இறையாண்மை கொண்ட நாடுகள், குறிப்பாகப் பெரிய நாடுகள், ஒரு காலத்தில் வெளிப்புற அழுத்தங்களிலிருந்து ஓரளவிற்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்திருந்தன. இன்று, அத்தகைய பிரிவினையைப் பேணுவது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. அதேபோல், உலகின் பிற நாடுகளும் பெரும் வல்லரசுகளுக்குள் நடக்கும் அரசியல் மாற்றங்களிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள முடியாது என்பது தெளிவாகிறது.

இது, 1980-கள் முதல் 2010-கள் வரை ஆதிக்கம் செலுத்திய 'தாராளவாத உலகமயமாக்கலின்' (liberal globalization) நீடித்த விளைவுகளில் ஒன்றாகும்.

பனிப்போரின் முடிவு, பொருளாதார ஒன்றிணைப்பிற்கு அரசியல் உத்வேகத்தை அளித்தது. முன்னதாகவே, மேற்கத்திய நாடுகளில் பின்பற்றப்பட்ட நவ தாராளவாதக் கொள்கைகள் (neoliberal policies) இதனை ஊக்குவித்திருந்தன. சோவியத் ஒன்றியம் மற்றும் சோசலிச முகாமின் வீழ்ச்சி, சந்தைப் பொருளாதாரத்தின் மேன்மையை மட்டுமல்லாமல், தாராளவாத ஜனநாயகமே அரசாங்கத்தின் மிகச்சிறந்த மற்றும் இறுதியான வடிவம் என்பதற்கான ஆதாரமாகக் கருதப்பட்டது.



இதன் விளைவாக, உலகம் காலப்போக்கில் பொதுவான கொள்கைகள் மற்றும் விழுமியங்களை நோக்கி ஒன்றிணையும் என்றும், மேற்கத்திய தாராள வாத மாதிரி உலகளாவிய ஒன்றாக மாறும் என்றும் எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், அந்த எதிர்பார்ப்பு இப்போது தகர்ந்து கொண்டிருக்கிறது.

உள்நாட்டு அரசியல் மாற்றங்கள் — குறிப்பாக, ஒரு காலத்தில் உலகளாவிய தரநிலைகளை நிர்ணயிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்த நாடுகளில் — ஒன்றிணைப்பிற்குப் பதிலாக, பன்முகத்தன்மையையே அதிக அளவில் உருவாக்குகின்றன. அமெரிக்காவிற்கும் மேற்கு ஐரோப்பாவிற்கும் இடையிலான உறவு இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

'பழைய உலகம்' (ஐரோப்பா) மற்றும் 'புதிய உலகம்' (அமெரிக்கா) ஆகியவற்றின் அரசியல் மரபுகளும் கலாச்சாரப் பார்வைகளும் எப்போதும் கணிசமாக வேறுபட்டே இருந்தன. இருப்பினும், கம்யூனிசத்திற்கு எதிரான அவர்களின் பொதுவான போராட்டம் மற்றும் அதைத் தொடர்ந்து பனிப்போரில் அவர்கள் பெற்ற கூட்டு வெற்றி, மிகவும் வலுவான ஒரு அரசியல் கூட்டணியை உருவாக்கியிருந்தது.

அந்த ஒற்றுமை இப்போது பலவீனமடைந்து வருகிறது. உண்மையில், அமெரிக்காவிற்கும் மேற்கு ஐரோப்பாவிற்கும் இடையிலான உறவுகளே, அட்லாண்டிக் பெருங்கடலின் இருபுறமும் அரசியல் பிளவுகளுக்கு ஒரு காரணமாக மாறியுள்ளன. அந்த அரைக்கண்டத்தின் அரசியல் கட்டமைப்பு, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் எதிர்ப்பாளர்களுக்கு வெளிப்படையாக அனுதாபம் தெரிவிப்பதோடு, இயன்ற போதெல்லாம் அவர்களுக்கு உதவவும் முயல்கிறது. அதே வேளையில், ட்ரம்பும் அவரது ஆதரவாளர்களும் பிற நாடுகளின், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் தேர்தல் அரசியலில் தலையிடுவதற்குச் சிறிதும் தயக்கம் காட்டுவதில்லை.

ஒரு காலத்தில் பகிரப்பட்ட விழுமியங்களின் அடிப்படையில் அமைந்த, அசைக்க முடியாத கூட்டாண்மை என்று முன்வைக்கப்பட்ட உறவு, இன்று உள்நாட்டு அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் மோதலால் பெரிதும் மாற்றமடைந்து வருகிறது. ட்ரம்ப் நிர்வாகத்தின் பிரதிநிதிகளால் ஊக்கு விக்கப்பட்டு, மேற்கத்திய நாகரிகம் குறித்த விவாதம் மீண்டும் முன்னுக்கு வந்திருப்பது, தற்போதைய சூழலை இன்னும் தெளிவாக உணர்த்துகிறது.

பல தசாப்தங்களாக, தொன்மைக் காலத்திலிருந்து வேரூன்றிய 'மேற்கத்திய நாகரிகம்' என்ற கருத்து, 'உலகளாவிய மனித விழுமியங்கள்' என்ற சொல்லாடலால் படிப்படியாக இடமாற்றம் செய்யப்பட்டது. இதில், நாகரிக ரீதியான வேறுபாடுகள் காலாவதியானவையாகவோ அல்லது அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவோ கருதப் பட்டன.

இத்தகைய உலகளாவிய விழுமியங்கள், மேற்கத்திய நாடுகளின் புவிசார் அரசியல் மற்றும் கலாச்சார விரிவாக்கத்திற்கு ஒரு கருத்தியல் அடித்தளத்தை வழங்கின. ஆனால், உலகளாவிய மேலாதிக்கத்தைத் தேடிய இந்த முயற்சிக்கு ஒரு விலை கொடுக்க வேண்டியிருந்தது; அது, மேற்கத்திய நாடுகளின் சொந்த வரலாற்று மற்றும் கலாச்சார அடித்தளங்களை மெல்ல மெல்லக் கைவிட்டதாகும்.



இந்த விரிவாக்கக் காலம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், 'அடையாளம்' குறித்த கேள்வி மீண்டும் எழுந்துள்ளது. சமூகங்கள் தங்களை மற்றவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் அம்சங்கள் எவை, எந்தெந்த மரபுகளைத் தொடர்ந்து பாதுகாக்க விரும்புகின்றன, மற்றும் அவற்றின் அரசியல் மற்றும் கலாச்சார வேர்கள் எங்கே உள்ளன என்று மீண்டும் சிந்திக்கத் தொடங்கியுள்ளன. இந்த விவாதம் மேற்கத்திய நாடுகளில் மிகவும் தீவிரமாக இருந்தாலும், இது அங்கு மட்டுமே நிகழ்வதல்ல.

தேர்தல்கள் என்பது, தேசிய அடையாளம் மற்றும் சமூகத்தைப் பற்றிய மாறுபட்ட பார்வைகளுக்கு இடையிலான போட்டியாக மாறி வருகின்றன. இயல்பாகவே, இத்தகைய போராட்டங்கள் ஒவ்வொரு நாட்டிலும் வெவ் வேறு வடிவங்களை எடுக்கின்றன; இதுவே மிக முக்கியமான விஷயம்—ஏனெனில், நாகரிக ரீதியான மற்றும் வரலாற்று ரீதியான வேறுபாடுகள் மிகவும் முக்கியமானவை.

அரசியல் போட்டியின் தீவிரமும், வெற்றியைப் பெறுவதற்காக எந்த வழியையும் கையாளத் துணியும் எதிரெதிர் தரப்புகளின் மனநிலையும், ஒரு பரந்த மாற்றத்தின் அறிகுறிகளாகும். இதன் மையத்தில் ஒரு அடிப்படை கேள்வி உள்ளது: கொந்தளிப்பான உலகளாவிய மாற்றங்களுக்கு மத்தியில், சமூகங்கள் எவ்வாறு நிலைத்தன்மையையும் திறமையான நிர்வாகத்தையும் தக்கவைத்துக் கொள்ள முடியும்?

இதற்கான விடை, பொதுவான அல்லது உலகளாவிய சூத்திரங்களில் இல்லை; மாறாக, ஒவ்வொரு நாட்டின் கலாச்சார மரபுகள், வரலாற்று அனுபவங்கள் மற்றும்

தொடர்ச்சி: பக்கம் 16

செம்மணி கூட்டுப் ... தொடர்ச்சி...

றன.

வழக்கமான சர்வதேச மனிதாபிமானச் சட்டம், கூடுதலாக, பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், சித்திரவதை, கட்டாயமாகக் காணாமல் போகச் செய்தல் மற்றும் பொருந்தக்கூடிய விதிகளால் பாதுகாக்கப்படும் நபர்களின் கொலை ஆகியவற்றையும் தடை செய்கிறது.

செம்மணியில் அடக்கம் செய்யப்பட்ட நபர்கள் ஆயுத மோதல் தொடர்பாகச் சட்டவிரோதமாகக் கொல்லப் பட்டனர் என்பதை ஆதாரம் நிறுவும் பட்சத்தில், அந்த நடத்தை சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கடுமையான மீறல்களாகவும் போர்க்குற்றங்களாகவும் அமையக்கூடும்.

இத்தகைய தீர்மானங்களுக்கு, தொடர்புடைய தடை செய்யப்பட்ட செயல்கள், ஆயுத மோதலுடனான அவசிய மான தொடர்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பின் பொருந்தக் கூடிய கூறுகளை நிறுவும் சான்றுகள் தேவைப்படுகின்றன. எனவே, வரலாற்றுச் சூழல் சட்டரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது.

1990-களில் யாழ்ப்பாணத்தில் நடந்த இராணுவக் காவலில் வைத்தல், காணாமல் போதல் மற்றும் கூறப்படும் மரணதண்டனைகள் குறித்த அறிக்கைகள் தடயவியல் கண்டுபிடிப்புகளுடன் சேர்த்து ஆராயப்பட வேண்டும்.

சான்றுகள் நிறுவப்படுவதற்கு முன்பே அத்தகைய முடிவுகளை ஊகிக்காமல், கிடைத்த எச்சங்கள் சட்டவிரோதக் காவலில் வைத்தல், கொலை செய்தல் அல்லது உடல்களை அப்புறப்படுத்துதல் ஆகியவற்றுடன் ஒத்துப்போகும் வடிவங் களை வெளிப்படுத்துகின்றனவா என்பதை ஒரு நம்பகமான விசாரணை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆயுத மோதலின் போது நிகழ்கிறது என்பதற்காக மட்டுமே சட்டவிரோதக் கொலையைச் சர்வதேச மனிதாபிமான சட்டம் அனுமதிப்பதில்லை. பல தசாப்தங்கள் கடந்துவிட்டன என்பதற்காக, போர்க்குற்றங்கள் என்று சந்தேகிக்கப்படுபவை குறித்து விசாரணை நடத்துவதன் முக்கியத்துவம் குறைந்துவிடாது.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தனிநபர் குற்றவியல் பொறுப்பு

செம்மணியில் கண்டெடுக்கப்பட்டவை, சர்வதேச குற்ற வியல் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த கேள்விகளையும் எழுப்புகின்றன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட் டத்தின் 7-வது பிரிவின்படி, கொலை, சிறைவைத்தல், சித்திர வதை மற்றும் கட்டாயக் காணாமல் ஆக்குதல் ஆகிய செயல்கள், பொதுமக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட அல்லது பரவலான தாக்குதலின் ஒரு பகுதியாக, அந்தத் தாக்குதல் குறித்த அறிவுடன் செய்யப்படும்போது, அவை 'மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாகக்' கருதப்படலாம்.

செம்மணியில் மீட்கப்பட்ட நபர்கள், தமிழ் பொது மக்களுக்கு எதிரான ஒரு பரந்த தாக்குதலுடன் தொடர்பு டைய சட்டவிரோதக் கொலைகள் அல்லது கட்டாயக் காணாமல் போதல்களுக்கு ஆளானவர்கள் என்பதை நம்பகமான சான்றுகள் நிலைநாட்டினால், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை நிர்வகிக்கும் சர்வதேச சட்டக் கட்ட மைப்பின் கீழ் அந்தச் சூழ்நிலைகள் விசாரணைக்கு உட்படுத்தப்படலாம்.

இருப்பினும், ஒரு கூட்டுப் புதைகுழியைக் கண்டு பிடிப் பது மட்டுமே மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கத் தேவையான சூழல் மற்றும் மனக் கூறு களை நிலைநாட்டாது.

விசாரணையாளர்கள் தொடர்புடைய குற்றச் செயல், ஒரு பரவலான அல்லது திட்டமிட்ட தாக்குதலுடனான அதன் தொடர்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்புக்குத் தேவை யான அறிவு ஆகியவற்றை நிலைநாட்ட வேண்டும்.
இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளுக்கும் இதே சான்றியல் ஒழுங்குமுறை பொருந்தும்.

தொடரும்...

பயங்கரவாதத் தடைச் ... தொடர்ச்சி...

காட்டுவதுடன் 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின் சரத்து 73, நிலுவையிலுள்ள மற்றும் பழைய வழக்குகளுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு தொடர்ந்து பொருந்தும் என்று பாதுகாப்பது, அரசாங்கத்தின் பயங்கரவாத தடைச்சட்ட ஒழிப்பு நாடகத்தின் போலித் தன்மையை அம்பலப்படுத்தியுள்ளது.

இத்தாலிய மார்க்சிய சிந்தனையாளர் அன் டோனியோ கிராம்சியின் 'ஆதிக்கம்' பற்றிய கோட் பாட்டின்படி, ஒரு நாட்டின் அரச அதிகாரமானது வெறும் நேரடியான வன்முறை மற்றும் ஒடுக்குமுறை மூலம் மட்டும் பாதுகாக்கப்படுவதில்லை; மாறாக, மக்கள் ஒப்பு தலைப் பெறுவதன் மூலமும், தாங்கள் கொண்டுவரும் அடக்குமுறை ஏற்பாடுகளை அவசியமானவை அல்லது தார்மீகமானவை என நியாயப்படுத்துவதன் மூலமுமே அது நிலைநிறுத்தப்படுகிறது.

'தேசிய பாதுகாப்பு', 'பொதுமக்களின் பாதுகாப்பு' மற்றும் 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒழித்தல்' போன்ற அழகான சொற்பதங்கள் அரசினால் மக்கள் ஒப்புத லைப் பெற்றுக்கொள்வதற்கான கருத்தியல் முகமூடி களாகப் பயன்படுத்தப்படுகின்றன. சட்டத்தின் பெயரை 'பயங்கரவாதம்' என்பதிலிருந்து 'ஒழுங்கமைக்கப் பட்ட குற்றம்' என்று மாற்றுவது, பொதுமக்கள் அச்சட்டத்தைப் பார்க்கும் வெளிப்படையான பார்வையை மாற்றக்கூடுமே தவிர, தனிமனித சுதந்திரத்தின் மீது அது ஏற்படுத்தும் வன்மமான தாக்கத்தைக் குறைத்துவிடாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகப் பிரகடனப்படுத்திக்கொண்டு, அதன் மிகவும் கொடூரமான அடக்குமுறை அதிகாரங்களை 'பயங்கரவாதத்திலிருந்து அரசினைப் பாதுகாக்கும் சட்டமூலம்', 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கும் சட்டமூலம்' மற்றும் 'வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளிகளை தடுத்தல் சட்டமூலம்' ஆகிய மூன்று சட்டமூலங்களுக்குள் அரசு பிரித்து வைக்குமாயின், அடக்குமுறையை ஒழித்ததாக அர்த்தமாகாது. மாறாக, ஜலசர்ப்பத்தின் ஒரு தலையை வெட்டும்போது அதற்குப் பதிலாகப் பல தலைகள் முளைப்பது போலவே அமையும்.

எனவே, ஒரு அடக்குமுறைச் சட்டத்தை ஒழிப்பது என்பது அதன் ஒரு தலையை மட்டும் வெட்டுவது அல்ல, மாறாக அதன் வேராய் இருக்கும் ஒட்டுமொத்த அதிகாரக்கட்டமைப்பையும் முற்றிலுமாகக் களைந்தெறி வதே நியாயமானதாகும்.

• • •

வடக்கு மீனவர்கள்... தொடர்ச்சி...

என்றும் துரைராசா ரவிகரன் சாடினார்.

"வடக்கு மீனவர்களின் பொறுப்பில் வடக்கு கடற் பகுதியைத் தாருங்கள். கூடிய விரைவில் சீராக்கிக் காட்டு கின்றோம் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நீங்கள் கொஞ்சம் அங்குள்ள மீனவர்களின் குடும்பங்களைச் சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் உழைப்பதில்லையா? சாப்பிட வேண்டாமா? பிள்ளைகளின் கல்வி மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தையும் எண்ணிப் பாருங்கள். வடபகுதி மீனவர்களையும் வாழ விடுங்கள்" என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.

நீதியாகவும் நேர்மையாகவும் சீரான வகையில் கடற்றொழில் மேற்கொள்ளும் மீனவர்கள் வஞ்சிக்கப்படு கின்றனர்.

இந்திய இழுவைமடிச் சட்டவிரோதிகளால் கடல் வளங்கள் மட்டுமல்ல, மீன்பிடி வலைகளும் முற்றாக அழிக்கப்படுகின்றன.

அண்மையில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் இடம் பெற்ற ஒரு வழக்கில், இலங்கை மீனவர்கள் தமது கடலையும் அதன் வளங்களையும் சிறப்பாகப் பராமரிப்பதாகவும், அங்கு கடல் வளம் தூய்மையாக உள்ளதால் இலங்கைக் கடற்பரப்பில் கடல் வளம் அதிகரித்திருப்பதாகவும் இந்திய நீதியரசர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியக் கடற்பகுதி அசுத்தமடைந்துள்ளதால் மீன் வளம் அங்கு அழிந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மீன்வளத்தைத் தேடி இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பிராந்தியத்திற்குள் சென்றால் நிச்சயம் கைதுசெய்யப் படுவார்கள் என்றும், கைது நடவடிக்கையைத் தவிர்க்க வேண்டுமெனில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழை வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் இந்திய நீதியரசர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக ரவிகரன் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் தவறான விடயத்தை மே ற்கொள்கின்றார்கள் என்பதை இந்திய நீதியரசர்களே சுட்டிக்காட்டியுள்ளனர். இருப்பினும், அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையால் முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஓரிரு படகுகளையும் அந்தப் படகுகளில் உள்ள மீனவர்களையுமே கடற்படையால் கைதுசெய்து நட வடிக்கை எடுக்க முடிகின்றது.

இவ்வாறு இலங்கைக் கடற்படையினர் அலட்சியப் போக்குடன் செயற்படுவது மிகவும் கேவலமானது எனச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மூன்றாவது ... தொடர்ச்சி...

கொண்ட பழமைவாத வர்ணனையாளர் டக்கர் கார்ல்சன் போன்ற நபர்களை அது உள்ளடக்கியிருக்கக்கூடும் என்றும் அவர் நம்புகிறார். போக்கை மாற்றத் தவறினால் அது இறுதியில் வன்முறைக்கு வழிவகுக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

ஈரானுடனான போர் விவகாரத்தில் அதிபர் டொனால்ட் ட்ரம்புடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டிற்குப் பிறகு, ஜூலை மாதம், மூன்றாவது அரசியல் கட்சியை நிறுவ உதவுவதற்கான திட்டங்களை கார்ல்சன் அறிவித் தார். கொலம்பியா ஜர்னலிசம் ரிவியூவுக்கு அளித்த பேட்டியில், அமெரிக்க அரசியல் அமைப்பை ஒரு "மோசடி" என்றும், "ஜனநாயகம் போல் பாசாங்கு செய்யும் ஒரு கட்சி ஆட்சி" என்றும் அவர் விவரித்தார். மேலும், குடியரசுக் கட்சியினரும் ஜனநாயகக் கட்சியினரும் போர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளில் திறம்பட ஒன்றுபட்டுள்ளனர் என்றும் வாதிட்டார். அவர் தேர்தலில் போட்டியிடுவதை நிராகரித்தார்.

தடைகளின் மத்தியிலும்... தொடர்ச்சி...

உரிமையில்லை.

மக்கள் தமது பூர்வீகக் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படும் வரை போராட்டம் தொடரும் என பலாலி மக்கள் உறுதியுடன் பயணிக்கின்றனர். ஒருநாள் இரண்டு நாளல்ல, 36 ஆண்டுகளாக இந்த மக்கள் தமது வாழ் நிலத்தை இழந்து வாழ்கிறார்கள். நினைத்துப் பார்க்க முடியாத அலைச்சலும் துயரும். இந்த நெடிய போராட்டம் என்பது ஒரு தலைமுறையின் காத்திருப்பையும் நிலஉரிமை மறுக்கப்பட்ட ஒரு இனத்தின் வரலாற்றையும் வெளிப் படுத்துகிறது. அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பலாலிச் சந்தியில் ஒன்றுசேர்வது என்பது தமது காணி நிலத் துண்டுக்காக மாத்திரமின்றி எமது வரலாற்றுக்காகவும், வாழ்வுரிமைக்காகவும் திரள்கின்ற போராட்டமாகும்.

• • •

மட்டக்களப்பு மேய்ச்சல்... தொடர்ச்சி...

சிங்கள அமைப்பு ஆரம்பித்து, அதன் வேலைத்திட்டங்கள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டன. இதனைத் துரிதமாகச் செயற்படுத்த மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக அதிகாரப்பூர்வமாக 2019 நவம்பர் 18இல் பதவியேற்ற பின்னர், கிழக்கு மாகாண ஆளுநராக 2019 மே 15இல் அனுராதா யஹம்பத்தை ஜனாதிபதி கோட்டாபய நியமித்தார். அவர் அன்று தொடக்கம் 2023 டிசம்பர் 04 வரை கிழக்கு மாகாண ஆளுநராக ஏறக்குறைய நான்கு வருடங்கள் கடமையாற்றினார். அந்த நான்கு வருடங்கள்தான் அவருடைய நேரடி வழிகாட்டலில் மயிலத் தமடு, மாதவனையில் திட்டமிட்ட அத்துமீறிய பயிர்ச்செய்கை என்ற போர்வையில் குடியேற்றங்கள் இடம்பெற்றன. அந்தப் பெண்மணி அந்த மட்டக்களப்பு மேய்ச்சல் தரை அபகரிப்பை மேற்கொள்ளும் சிங்கள அமைப்பில் உள்ளார் என்பதும், அதற்காகவே கிழக்கு மாகாண ஆளுநராக கோட்டாபய அவரை நியமித்தார் என்ற கருத்தும் பரவலாகப் பேசப்பட்டது.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை அப கரிப்புக்கு எதிராகவும், தங்கள் மேய்ச்சல் தரையை மீட்டுத் தரக் கோரியும் மட்டக்களப்பில் கால்நடைப் பண்ணை யாளர்களும் பொதுமக்களும் இணைந்து தொடர்ச்சியாகக் கடந்த 17 வருடங்களாகப் போராடிய நிலையில், கடந்த 2026 நவம்பர் 02ஆம் திகதி நடந்த மிகப் பெரிய அளவிலான கவனயீர்ப்புப் போராட்டமானது மாவட்டத்துக்குள் முடங்கிய பிரச்சினை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் கவனத்தை ஈர்த்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. எனினும், மாவட்ட அதிகாரிகளின் மெத்தனப் போக்கு தொடருமானால், தொடர்ந்து போராடு வதைத் தவிர வேறு வழியில்லை என்பதே உண்மை.

ஐரோப்பாவில் குளிரூட்டும்... தொடர்ச்சி...

திங்கட்கிழமை இரவு, பணியில் இருந்த ஒரு தொழில்நுட்ப வல்லுநர் அந்த வசதிகளுக்குள் வெப்பநிலை உயர்வதைக் கவனித்தபோது இந்தத் தாக்குதல் நிகழ்ந்தது. தங்கள் கண்காணிப்பு மற்றும் எச்சரிக்கை அமைப்புகள், ஊழியர்கள் கோளாறுகளைக் கண்டறியவும், பாதிக்கப் பட்ட இரத்தப் பொருட்கள் சேதமடைவதற்கு முன்பே அவற்றைப் பாதுகாக்கவும் அல்லது வேறு இடத்திற்கு மாற்றவும் உதவியதாக EFS கூறியது.

"எந்தவொரு உடல்நலப் பாதிப்புகளும் கண்ட றியப்படவில்லை, மேலும் எந்த இரத்தப் பொருட்களும் இழக்கப்படவில்லை," என்று கூறிய EFS, இரத்த சேகரிப்பு மற்றும் விநியோக சேவைகள் தடையின்றி தொடர்ந்ததாகவும் மேலும் தெரிவித்தது.

ஐரோப்பா முழுவதும் உள்ள பல்பொருள் அங்காடிக ளின் குளிரூட்டும் அமைப்புகள் மீது தொடர்ச்சியாக நடந்துவரும் இதேபோன்ற தாக்குதல்களுக்கு மத்தியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அக்டோபர் மாதம், பிரான்சில் உள்ள கேரஃபோர், இன்டர்மார்ச் மற்றும் கோ-ஆப்ப ரேட்டிவ் யூ கடைகள் உள்ளிட்ட சுமார் 700 பல்பொருள் அங்காடிகளில் ஹேக்கர்கள் குளிரூட்டும் கருவிகளைச் செயலிழக்கச் செய்ததாகக் கூறப்படுகிறது.

திங்களன்று நடந்ததாகச் சந்தேகிக்கப்படும் புதிய இணையவழித் தாக்குதல்கள், பெல்ஜியம், ஸ்வீடன், லக்சம்பர்க், அயர்லாந்து மற்றும் எஸ்டோனியாவில் உள்ள டஜன் கணக்கான பல்பொருள் அங்காடிகளைப் பாதித்தன. ஹேக்கர்கள் தொலைவிலிருந்து பனி நீக்கும் கருவிகளைச் செயல்படுத்தியதால், ஸ்வீடனில் உள்ள சில கடைகளில் வெப்பநிலை 50°C ஆக உயர்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மாகாண சபை தேர்தலை ... தொடர்ச்சி...

மாகாணசபைத் தேர்தல்களைத் தொடர்ந்து ஒத்திவைப் பதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப் பாட்டையும் கட்டியெழுப்ப முடியாது எனக் குறிப்பிட்டுள்ள அக்கட்சி, அதிகாரப் பகிர்வையும் மக்களின் அரசியல் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதே உண்மையான ஜனநாயகத்திற்கும் நல்லி ணக்கத்திற்கும் அடித்தளமாக அமையும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தமிழர்களின் நிலங்களை... தொடர்ச்சி...

இத்தகையதொருஇக்கட்டானகாலகட்டத்தில்,அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சியின் ஊடாக வடகிழக்கில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், இம்மக்களின் நியாயமான போராட்டத்திற்குக் குரல் கொடுக்கத் தவறியதோடு மட்டுமல்லாமல், அதனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொச்சைப்படுத்தும் வகையிலும் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதும் கடும் கண்டனத்திற்குரியது.

தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றடைந்த தேசிய மக்கள் சக்தியின் தமிழ் பிரதிநிதிகள், கொழும்பில் உள்ள அரசாங்கத்தின் அதிகார மையங்களைத் திருப்திப்படுத்தும் முகமாகத் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை மழுங்கடித்து வருகின்றனர்.

மயிலத்தமடு விவகாரத்தில் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் பௌத்த மேலாதிக்கச் சக்திகளுக்கும் எதிராகச் சட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்துமாறு கோரி பண்ணையாளர்கள் வீதிகளில் இறங்கிக் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கும் போது, இவர்களின் வலியை உணர்ந்து குரல் கொடுக்க வேண்டிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களே அதனை அற்ப அரசியல் லாபங்களுக்காகக் குறைத்து மதிப்பிடுவது துரதிர்ஷ்டவசமானது. மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகத் தட்டிக் கேட்க வேண்டியவர்களே, அரசாங்கத்தின் மௌனத்திற்குத் துணைபோகும் வகையில் செயற்படுவது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கும் இழைக்கப்படும் வரலாற்றுத் துரோகமாகும்.

கிழக்குமாகாணத்துத்தமிழ்மக்கள்,இன்றுதங்களின் நில உரிமைகளையும் அடையாளத்தையும் பாதுகாப்பதற்காக மீண்டும் வீதிக்கு இறங்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தென்னிலங்கையில் இனவாத அரசியலை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி, கிழக்கில் பௌத்த மேலாதிக்கச் சக்திகளின் அபிலாஷைகளுக்குத் துணைபோவது முரண்பாடான ஒரு நிலையாகும். சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டு, பௌத்த தீவிரவாத சக்திகளின் பிடியில் அரசாங்கம் சிக்கிக்கொள்ளுமானால், அது நாட்டில் மீண்டும் இன நல்லிணக்கத்தைக் குலைத்து, பாரிய அதிருப்திகளையும் அரசியல் கொந்தளிப்புகளையும் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

• • •

சுன்னாகம் – சிவன் சிறுவர் ... தொடர்ச்சி...

இடையிடையேமாணவர்களின் பேச்சு, கவிதை, நாடகம், நடனங்கள் போன்ற நிகழ்வுகளும் கண்ணுக்கு விருந்தாக வழங்கப்பட்டன. அத்தோடு, வயிற்றுக்கும் வாய்க்கும் சுவையாகச் சிற்றுண்டிகளும் குளிர்பானமும் வழங்கப்பட்டன.

எண்பத்து எட்டு வயது முதியவரைப் பதினொரு வயதுச் சிறுவன் கௌரவித்த அழகான தருணங்களையும் அங்கே காணக்கிடைத்தது. அங்கு வந்திருந்த விருந்தினர்கள் உண்மையில் கலை இலக்கியப் படைப்புத்திறன் கொண்டவர்கள் மட்டுமே. பெரும்பாலானோருக்கு அது முதல் மேடை. அதாவது, தாம் பரிசில்களை வழங்கியமை இதுவே முதலாவது சந்தர்ப்பம் எனவும் மகிழ்ச்சியோடு கூறப்பட்டது.

இந்த நிகழ்வில் மகிழ்ச்சியான இன்னொரு விடயம் என்னவெனில், கௌரவிப்புக்காக அழைக்கப்பட்ட முதியோர்களுக்கு மட்டுமல்லாது, அந்த அரங்கினுள் அமர்ந்திருந்த அத்தனை மூத்தோருக்கும், வந்திருந்த அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. எந்தக் குழந்தை முகமும் வாடிச் செல்லவில்லை.

பேச்சு வன்மை காணாது என்றும், பேச்சு வன்மை இல்லை என்றும் புறந்தள்ளப்பட்ட மாணவர்களே மெருகேற்றப்பட்டு முதல் மேடை ஏறித் தமது திறமைகளைச் சிறப்புற வெளிப்படுத்தினர்.ஓடத் தெரிந்தவர் ஓடி முன்னிலை அடைவது வெற்றி அல்ல. ஓடத் தெரியாதவனை ஓடவிட்டு வெற்றி பெற வைப்பதில்தான் உண்மையான ஆளுமை உள்ளது எனும் எண்ணத்தைச் செயலாக்கியிருந்தது சிவன் சிறுவர் கழகம்.

மாலை ஆறு மணியளவில் நிகழ்வுகள், பரிசு வழங்கல்கள் அனைத்தும் இனிதே நிறைவுற்றன. அந்தச் சிறுவர் கழகத்தில் தூவப்பட்ட விதை ஒன்று முளைத்துவிட்டதை எடுத்துக்காட்டும் முகமாக, பதினாறு வயது நிறைவுற்ற அதன் அங்கத்துவ மாணவி ஒருவர், மன விருப்போடு, தம்மைப் பார்த்துப் பார்த்து உருவாக்கிய அதன் நிறுவுநருக்கு வாழ்த்தும் கௌரவிப்பும் செய்த தருணத்தைக் காண முடிந்தது.

தனி ஒருவராக இதனை முன்னெடுக்கின்ற சிவன் சிறுவர் கழக நிறுவுநர் கவிதாமலர் சுதேஸ்வரன் என்பவரின் அர்ப்பணிப்பான சேவைக்குப் பின்னால் அவரது அயராத உழைப்பு உள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவரது சேவை மனது என்றும் தொடர வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் இலக்கு மின்னிதழ் குழுமம் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.

• • •

ஹோர்முஸ் நீரிணை... தொடர்ச்சி...

பெறுவதற்காக சீனக் கப்பல்களுக்கு இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத் தடைகளுக்கு உள்ளாகியுள்ள ஈரானுக்கு, மனிதாபிமான அடிப்படையில் இந்தியா மருந்துகள் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கி வருகிறது; மேலும், இவை ஈரானைச் சென்றடைவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, இந்த முக்கியமான நீர்வழிப் பாதையில் ஈரான் கடல் போக்கு வரத்தைக் கட்டுப்படுத்தியது. இதற்குப் பதிலடியாக, ஈரானிய துறைமுகங்களை அமெரிக்கா கடற்படை மூலம் முற்றுகையிட்டது. பாரசீக வளைகுடாவையும் ஓமன் வளைகுடாவையும் இணைக்கும் ஹோர்முஸ் நீரிணை, இந்த மோதலுக்கு முன்பு உலகளாவிய எண்ணெய் மற்றும் எரிவாயு வர்த்தகத்தில் சுமார் ஐந்தில் ஒரு பங்கை கையாண்டு வந்தது.

இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 90 சதவீதத்தை இறக்குமதி செய்கிறது; இதில் சுமார் 30 சதவீதம் இந்த நீரிணை வழியாகவே வருகிறது. இந்தியாவின் திரவ பெட்ரோலிய எரிவாயு (LPG) இறக்குமதியில் பெரும்பகுதியும் இந்த வழித்தடம் வழியாகவே நடைபெறுவதால், இந்தியாவின் எரிசக்தி விநியோகத்திற்கு இது மிக முக்கியமான பாதையாக உள்ளது.

31 வது ஆண்டு யாழ்/வலிகாம... தொடர்ச்சி...

தெளியாதது ஏன்? ஆதாரமின்றி எப்படித்தான் ஏற்றுக் கொள்ள முடிந்தது.

தமிழர் பக்க நியாயங்களை, நிரூபணங்களை புறத்தே தள்ளிவைக்கும் நீதிக்கு முரணான தீர்மானங்களை தொடர் கதையாக எழுதுவதை மேற்குலகம் பரிசீலிக்கும் தைரியத்தை இழந்து விடக்கூடாது என்பதே எமது கரிசனை, மோதி முரண்படவல்ல.

நெருப்புத் தணல்களை கறையான்கள் மொய்க்கின்ற கதை பழசு.

கணித கட்டுமான விதி ஒன்றை உருவாக்கிய மாமனிதர் பேராசிரியர் அ. துரைராஜாவையும், விவிலியத்தை (Bible) முதன்முதலில் தூய தமிழில் மொழி பெயர்த்து தந்த அறிஞர் ஆறுமுக நாவலரை சங்கிலிய மன்னனுக்குப் பின் மிகக் குறைந்தளவு தமிழர் புலிப்படை கொண்டு யாழ்மண்ணை ஆட்சிபுரிந்த தளபதி கிட்டுவைத் தந்த வீரமண்ணில் கோட்டையை முற்றுகையிட்டு கைப்பற்றி புலிக்கொடி ஏற்றிய தளபதி பானுவும் போராளிகளும் நிருவகித்த எங்கள் தாய் மண்ணையும் அதிலிருந்து தளைத்த திறன் வாய்ந்த தகுதி வாய்ந்த சமூகம்.

இருண்ட சமூகமாக எப்படி உங்கள் கண்களை உறுத்த தொடங்கியது.மக்களின் துயரம் ஏன் கண்டுகொள்ளப் படவில்லை. இதனையும் சேர்த்து எழுதி பாடப் புத்தகத்தில் எழுதட்டும்.

செம்மணியின் நீதி மறுப்பு உலக மானுட நீதியின் மறுப்பாகவே எங்கள் வரலாறு பதிவு செய்யும்.

உண்மைகளை மூடி, மறைத்து, திரிபுபடுத்தி செம்மணி வரலாற்றை எழுதி நோபல் பரிசிற்கு சிபாரிசு செய்ய எத்தனை கனவான்கள் எழுந்து வந்திருக்கிறார்களோ?

வில்லியம் கோல்டிங் மேற்கோள் காட்டி திரிபுபடுத்தி எழுதியதையே நம்பிய மேற்கின் மனநிலையில் விரைவான மாற்றம் வராதா என உரையாட விரும்புகிறோம்.

மனித குலம்மீது நம்பிக்கை ஊட்டும் ருட்கர் பிரெட்மனின் நாயகர்கள் நாங்கள் என்பதை நூறு முறை நிரூபிப்போம் வழிவிட்டுத் தாருங்கள் நோர்வேயில் வைத்து கழுத்தறுத்த தெல்லாம் போதுமென விழிப்படைந்து நின்று கேட்கிறோம்.

எமது மக்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப் பட்டவர்களாக சபிக்கப்பட்டவர்களாக இன்னும் இன்னும் பார்க்கப்படுகிறார்களா? ஒருவரை ஒருவர் வெட்டி சாய்க்கும் மனநிலை உடையவர்களா? நாங்கள்

அழகிய அமைதியான பாதுகாப்பான உலகம் ஒன்றினை கனவு காண்கின்றோம் அந்த பாதுகாப்பான நிம்மதியான சூழலில் எமது சந்ததி வாழவேண்டும் என்பதே எமது வேணவா.

யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் மனிதம் காப்பவர் மனிதம் காக்க துணை நிற்பவர். வே பிரபாகரன் எனும் அதிமானுடரின் ஒளிச்சுடரால் அது மேலும் துலங்கிற்று.

சர்வதேசமே இப்போது உங்கள் தீர்மானத்தை முன்வையுங்கள்.

ஆதாரம் தொடரும்.....

பிரிகேடியர் சு. ப. தமிழ்ச்... தொடர்ச்சி...

சர்வதேச பேச்சுவார்த்தையாளர்களிடம் அவர் முன்வைத்த கேள்விகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன.

தமிழ் மக்களுக்கு என்ன அரசியல் எதிர்காலம் உத்தரவாதம் அளிக்கப்படப் போகிறது? பாரிய அட்டூழியங்களுக்கு எவ்வாறு பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படும்? மேலும், வடக்கு-கிழக்கு மக்களின் கூட்டு உரிமைகளையும் பாதுகாப்பையும் மதிக்கும் ஒரு நீடித்த அரசியல் தீர்வுக்கு சர்வதேச சமூகம் எவ்வாறு ஆதரவளிக்க முடியும்?

இக்கேள்விகளுக்கு இராணுவ வெற்றிவாதத்தின் மூலமோ, வரலாற்றை மறுப்பதன் மூலமோ அல்லது காலம் செல்லச் செல்ல நீதிக்கான கோரிக்கைகள் தானாகவே மறைந்துவிடும் என்று எதிர்பார்ப்பதன் மூலமோ பதிலளிக்க முடியாது.

பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் மரணம் ஒரு அரசியல் பிரதிநிதியின் இழப்பைக் குறித்தது, ஆனால் அது அவர் பங்கேற்ற அரசியல் போராட்டத்திற்குத் தீர்வு காண வில்லை.

தமிழ் ஈழ வரலாற்றில் அவரது இடம், தேசியம், அரசியல் அங்கீகாரம் மற்றும் ஒரு மக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை குறித்த தொடர்ச்சியான விவாதங்களுடன் பிணைந்துள்ளது.

ஒரு அரசியல் குரல் மௌனிக்கப்படலாம்; ஒரு பேச்சுவார்த்தையாளர் கொல்லப்படலாம். ஆனால், மக்களின் உரிமைகள் குறித்த கேள்விக்கு குண்டுகளால் பதிலளிக்க முடியாது; நீதிக்கான கோரிக்கையை இராணுவ வெற்றியால் அழித்துவிடவும் முடியாது.

• • •

அமெரிக்க இடைக்காலத் ... தொடர்ச்சி...

தனித்துவமான அடையாளங்களிலேயே அடங்கியுள்ளது. இறுதியில், இத்தகைய உள்நாட்டு மாற்றங்கள், ராணுவ வலிமை அல்லது புவிசார் அரசியல் லட்சியங்களில் ஏற்படும் மாற்றங்களைவிட, உருவாகி வரும் உலக ஒழுங்கமைப்பில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

நாம் இப்போது ஒரு புதிய காலகட்டத்திற்குள் நுழைகிறோம்; இதில் நாடுகள் ஒன்றோடொன்று ஆழமாக இணைந்திருந்தாலும், அதே வேளையில் தங்கள் சொந்த நலன்களையும் அடையாளங்களையும் பாதுகாப்பதில் மிகுந்த உறுதியுடன் உள்ளன. இதுவே புதிய சர்வதேச அமைப்பின் மைய முரண்பாடாகும். உலகின் பிற பகுதிகளில் நடக்கும் அரசியல் மாற்றங்களின் விளைவுகளிலிருந்து எந்த நாடும் தப்பிக்க முடியாது; அதே சமயம், ஒவ்வொரு நாடும் தனது தனித்துவமான பண்பின் முக்கியத்துவத்தை மீண்டும் கண்டறிந்து வருகிறது.

இன்றைய உலகில், ஒவ்வொரு முக்கியத் தேர்தலும் ஒரு சர்வதேச நிகழ்வாக மாறுகிறது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நாம் அனைவரும் இதைக் கவனித்துக் கொண்டிருக்கிறோம்; இந்த நிகழ்வுப்போக்கு, குறைந்த பட்சம், மிகுந்த வியப்பைத் தருவதாகவே உள்ளது.

நன்றி: ரஸ்யா ருடே

மயிலத்தமடு – மாதவனைப்... தொடர்ச்சி...

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல் தரைகளில் அத்துமீறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் வெளிமாவட்டப் பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை வெளி யேற்றுமாறு இதுவரை எதிர்க்கட்சித் தலைவர் ஏன் கூறவில்லை? இந்த விடயம் தொடர்பாக ஏன் வாய் திறக்கவில்லை? என்றும் அவர் குறித்த அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 2024 ஜூலை 24ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின்போது, மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய சஜித் பிரேமதாச, தான் ஆட்சிக்கு வந்தால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கென ஒரு விசேட ஜனாதிபதி செயல ணியை அமைத்து, மயிலத்தமடு – மாதவனைப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைப்பதாகப் பகிரங்கமாக உறுதியளித்திருந்தார்.

தற்போது ஆட்சியில் இல்லை என்றாலும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற சிறப்புரிமையைப் பயன் படுத்தி, பாராளுமன்றத்தில் மேய்ச்சல் தரை தொடர்பாக விவாதிக்க முடியும். அதற்குச் சிரமமாக இருந்தால், பாராளுமன்றத்தில் இது தொடர்பாக உரை யாற்றியிருக்கலாம்.

இரண்டு வருடங்களாக எதிர்க்கட்சித் தலை வராக இருந்து விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் பற்றிப் பேசும் அவர், மேய்ச்சல் தரை விடயத்தைக் கணக்கில் எடுக்காமல் இருப்பதில் அவருடைய இனவாதம் வெளிப்படுகிறது என்பதே உண்மையாகும் என்று மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

செம்மணிக்கு நீதிகோரி... தொடர்ச்சி...

மதத் தலைவர்கள், தமிழ் அரசியல் கட்சிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

சிறுவர் ஆக்கம்

என் தோல்வி தான் என் வெற்றிக்கு படி

அருண் 10-ம் வகுப்பு படிக்கும் மாணவன். அவனுக்கு கணக்கு என்றாலே பயம். எப்போதும் கணக்கில் தான் குறைவான மதிப்பெண் வாங்குவான்.

ஒரு நாள் அரையாண்டு தேர்வு முடிவு வந்தது. எல்லா பாடத்திலும் நல்ல மதிப்பெண், ஆனால் கணக்கில் மட்டும் 35 மதிப்பெண் பெற்று சித்தியடையவில்லை.

எல்லாரும் அவனை கேலி செய்தார்கள். “அருணுக்கு கணக்கே வராது” என்று நண்பர்கள் சிரித்தார்கள். அருண் வீட்டில் போய் அழுதான். “இனிமேல் என்னால் முடியாது” என்று நினைத்தான்.

அப்போது அவன் அப்பா வந்து சொன்னார், “அருண், தோல்வி என்பது முடிவு இல்லைடா. அது வெற்றிக்கு போடும் முதல் படி. நீ எங்க தப்பு பண்ணினேன்னு மட்டும் பாரு” என்று.

அன்று முதல் அருண் மாறினான். தினமும் காலையில் 1 மணி நேரம் கணக்கு போட்டான். புரியாத கேள்வியை ஆசிரியரிடம் கேட்க வெட்கப்படவில்லை. நண்பர்கள் விளையாட கூப்பிட்டாலும் “முதல்ல படிப்பு, அப்புறம் தான் விளையாட்டு” என்று சொன்னான்.

இறுதி தேர்வு வந்தது. அருண் பயப்படாமல் எழுதினான். முடிவு வந்த அன்று... கணக்கில் 98 மதிப்பெண். வகுப்பிலேயே முதல் மதிப்பெண் அவனுக்குத் தான்.

அன்று கேலி செய்த நண்பர்களே வந்து “எப்படிடா?” என்று கேட்டார்கள். அருண் சிரித்துக் கொண்டே சொன்னான்,

“என் தோல்வி தான் என் வெற்றிக்கு படி!”



மு.சந்தியா
செல்வநாயகபுரம்

மலை


வானத்தை தொடும் உயர்ந்த மலையே,
உன் நிழலில் நிற்பதே சுகமே!

மேகம் உன்னை முத்தமிட்டு செல்ல,
அருவி உன் மடியில் விளையாடும்...

கல்லும் முள்ளும் நீ கடந்தாலும்,
கம்பீரமாய் நிற்கும் உன் தோற்றம்.
மனிதன் வாழ்க்கையும் உன்னை போல்,
உயர்ந்து நிற்க வேண்டும் மலையே!

பனி மூட்டம் உன்னை சுற்றி நிற்க,
பச்சைக் காடு உனக்கு கிரீடமாய் இருக்கும்.
உன் உச்சியில் நின்று கத்தினால்,
என் கவலை எல்லாம் காற்றில் பறக்கும்.
எத்தனை புயல் வந்தாலும் அசையாத,
நீ தான் எனக்கு தைரியம் சொல்லும் மலையே!

சு.திகழினி



இயற்கை

பூமி என்னும் பெரிய வீட்டில்,
பசுமை என்னும் போர்வை போர்த்தி,
காற்று வந்து தாலாட்டு பாட,
கடல் அலைகள் நடனம் ஆடும்...

மழைத் துளிகள் முத்தாய் விழ,
மண் வாசனை மனதை அள்ளும்.
பறவைக் கூட்டம் வானில் பறக்க,
இயற்கை தான் நம் உயிர் மூச்சு!

சூரியன் வந்து காலை வணக்கம் சொல்ல,
நிலவு வந்து இரவில் கதை சொல்லும்.
மலர்கள் எல்லாம் சிரித்து மணம் வீச,
வண்டுகள் வந்து பாட்டு பாடும்.
இயற்கையை நாம் காத்தால் தான்,
நாளைய உலகம் நமக்கு சொந்தம்!

லோ.வருனிக்ஷா
சிறுபுட்டி

ஓவியம்

வெள்ளைக் காகிதம் ஒரு வானம்,
வண்ணங்கள் எல்லாம் என் நட்சத்திரம்!

தூரிகை முனையில் கனவுகள் கரைய,
விரல்கள் சொல்லும் கதைகள் உயிர் பெறும்...

சிவப்பு என்றால் அது என் காதல்,
நீலம் என்றால் அது என் கனவு,
பச்சை என்றால் அது என் நம்பிக்கை,
எல்லாம் சேர்ந்ததே என் ஓவியம்!

வார்த்தையில் சொல்ல முடியாத சோகம்,
ஒரு கோட்டில் சொல்லி விடும் ஓவியம்.
என் மனதின் கண்ணாடி நீ தான்,
என்னை நானே பார்க்க வைக்கும் ஓவியமே!



ம.ஹரிணி
இலுப்பங்குளம்



தாயகமும் வாழ்வும்

